# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 22 ஞாயிற்றுக்கிழமை (04-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:69


## புலிகள் ஏற்கனவே சம்மதித்துவிட்டார்கள்

# பேச்சுக்கு அரசு இணங்குமானால்

# திகதியை உடன் தீர்மானிக்கலாம்

## இலங்கைத் தரப்பினரிடம் சொல்ஹெய்ம் எடுத்துரைப்பு

கொழும்பு,பெப்ரவரி4

**"இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பான பேச்சுக்களை நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துவிட்டார்கள். அரசு தனது இணக்கப்பாட்டைத் தெரிவிக்குமானால் உடனடியாகவே பேச்சுக்கான திகதியைத் தீர்மானிக்கமுடியும்"**

**- இவ்வாறு இலங்கை ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரிடம் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எடுத்துரைத்திருப்பதாகத் தெரிகின்றது.**

கொழும்புச் செய்தி வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டுள்ளன.

"பேச்சுக்கான இணக்கப்பாட்டை புலிகள் நேரத்துடனேயே தெரிவித்துவிட்டார்கள். அரசுதான் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டியிருக்கின்றது. பேச்சுக்கு அரசு சம்மதிக்குமானால் அதற்கான திகதியை உடன தீர்மானித்து விடலாம். ஆனால் இது

(16ஆம் பக்கம் பார்க்க)

## இம்முறை சுதந்திரதினக் காலத்தில் பாதுகாப்புக் கெடுபிடிகள் குறைப்பு

கொழும்பு,பெப்.4

1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதற் தடவையாக இந்த ஆண்டே இலங்கையின் சுதந்திரதினக் காலத்தில் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்புக் கெடுபிடிகள் ஓரளவு குறைவாகக் காணப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமாக யுத்தநிறுத்தத்தை அறிவித்துள்ளதால் அவர்கள் தெற்கில் தாக்குதல் எதனையும் நடத்தமாட்டார்கள் என்று அரசு கருதுவதாலேயே பாதுகாப்புக் கெடுபிடிகள் குறைந்துள்ளதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் கூறுகின்றன.

வழமையாக சுதந்திரதினம் போன்ற நாட்டின் முக்கிய தினங்களில் கொழும்பிலும் நாட்டின் கேந்திர நிலையங்களிலும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவர் என்ற அச்சம் காரணமாக பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதுடன் படையினரும், பொலீஸாரும் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பர். சோதனைக் கெடுபிடிகளும் தீவிரமாக இருக்கும். சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள் நடத்தப்பட்டு தமிழர்கள் பெருமளவில் கைதுசெய்யப்படுவதும வழமை.

எனினும் இந்த ஆண்டு சுதந்திர தினத்தையொட்டி பாதுகாப்புக் கெடு

(16ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரதினத்தை ஒட்டி

# முப்படை அணிவகுப்பை ஜனாதிபதி இன்று ஏற்பார்

நாட்டின் 53 ஆவது சுதந்திரதின கொண்டாட்டங்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் இன்று காலை 8 மணிக்கு நாடாளுமன்ற கட்டட மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

ஜனாதிபதி தேசியக் கொடியை ஏற்றிவைத்து முப்படையினரதும் மரியாதை அணிவகுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும்.

இதனையடுத்து நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி சுதந்திரதின உரையை நிகழ்த்துவார். இந்த உரையில், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் குறித்த அரசின் நிலைப்பாட்டை மக்களுக்கு ஜனாதிபதி தெளிவுபடுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை -

இன்று நடைபெறும் இந்த சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்காத தமிழ் கட்சிப் பிரமுகர்களுக்கோ அல்லது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ அழைப்புகள் அனுப்பப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வில் பங்குபற்றுமாறு பிரதமர் மற்றும் அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகள் உட்பட ஆயிரம் பேருக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

# நேற்று கதிர்காமருடன் பேச்சு நடத்தியபின் சொல்ஹெய்ம் கொழும்பிலிருந்து புறப்பாடு

கொழும்பு,பெப்.4

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கொழும்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்துப் பேசிய பின்னர், நேற்று மாலை கொழும்பிலிருந்து புறப்பட இருந்தார்.

கொழும்பில் மூன்று நாள் தங்கியிருந்து ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவருடன் விரிவான பேச்சுக்களை நடத்திய பின்னர், கொழும்பிலிருந்து புறப்பட்டுச் செல்லும் சொல்ஹெய்ம், விரைவில் லண்டனுக்குச் சென்று அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமது கொழும்புப் பேச்சுக்களின் பலாபலன்கள், பெறுபேறுகள் குறித்து அவர் அன்ரன் பாலசிங்கத்துடன் ஆராய்ந்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்துத் தீர்மானிப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-ம-6)

## முல்லைத்தீவிலிருந்து

# கடலுக்குச் சென்ற 4 மீனவர் கரைக்குத் திரும்பவில்லை

## படகுகள் சேதத்துடன் ஒதுங்கின

வவுனியா,பெப்.4

முல்லைத்தீவுக் கடலில் நேற்று முன்தினம் இரவு இரண்டு படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 4 மீனவர்கள் காணாமல் போய்விட்டதாக அங்கிருந்து வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணி தொடக்கம் சுமார் ஒரு மணி நேரம் மேற்படி கடற் பகுதியில் பீரங்கித் தாக்குதல் சத்தம் கேட்டதாகவும் -

பின்னர் நேற்றுக் காலை முல்லைத்தீவுக் கடற்பகுதியில் சம்பந்தப்பட்ட மீனவர்கள் சென்ற மீன்பிடிப் படகுகள் பலத்த சேதமடைந்த நிலையில் கரை ஒதுங்கியிருந்தன எனவும் - அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்

(16ஆம் பக்கம் பார்க்க)

# வட்டக்கச்சியில் தீவட்டி ஊர்வலம்!

## சாந்தி, சமாதானம் வேண்டி

வவுனியா,பெப்.4

நாட்டில் சாந்தி,சமாதானம் நிலவ வேண்டுமெனக் கோரி வட்டக்கச்சியில் நேற்று தீவட்டி ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

வட்டக்கச்சி நாகதம்பிரான் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் சாமி. கடைச் சந்தியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்துடன் முடிவடைந்தது. பல நூற்றுக் கணக்கானோர் தீவட்டிகளை ஏந்தியவாறு ஊர்வலத்திலும், பொதுக் கூட்டத்திலும் கலந்துகொண்டனர்.

(ம-7-164)

## வரவு செலவுத் திட்டம் தொடர்பாக ஆராய்வு

கொழும்பு,பெப்.4

அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர் குழு ஒன்று எதிர்வரும் புதன் கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து வரவு செலவுத் திட்டம் தொடர்பாக ஆராயவுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாவது வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டம் தொடர்பாகவே இந்தச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளது. (ம-6)

## மின்சாரம் தாக்கி இருவர் மரணம்

யாழ்ப்பாணம்,பெப்.4

ஆனைக்கோட்டையிலும், உடுப்பிட்டியிலும் இடம்பெற்ற இரு வெவ்வேறு சம்பவங்களில் மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழந்தனர்.

ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தில் நேற்று நண்பகல் தண்ணீர் இறைக்கும் மின்சார பம்பை இயக்கிய தயானந்தன் வாகீசன் (வயது 25) என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

உடுப்பிட்டி மல்லந்தறையில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் திருட்டு மின்சாரம் எடுக்க முயன்றதாகக் கூறப்படும் விக்னேஸ்வரன் விஜயகுமார் (வயது 22) என்பவர் உயிரிழந்தார்.

(உ-15-109)

## பிரமணாலங்குளம் சாவடியில்

# மக்களின் பொருள்களை பறிமுதல் செய்யாதீர்கள்

## நீதிவான் படையினருக்கு உத்தரவு

வவுனியா,பெப்.4

இராணுவத்தினரின் சோதனை நிலையங்களைக் கடந்து செல்லும் பொதுமக்கள் தம்முடன் கொண்டு செல்லும் எந்தவொரு பொருள்களையும் அவர்களது சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றிக் கட்டாயப்படுத்தியோ பறிமுதல் செய்வதற்கு இராணுவத்தினருக்கும், பொலீஸாருக்கும் அதிகாரம் இல்லை.

மாறாக பொதுமக்களின் பொருள்களை அவர்களது விருப்பத்துடன் இவர்கள் பெற்றுக் கொண்டால் அது லஞ்சம் பெறுவதாகும். பொதுமக்களின் விருப்பமின்றிக் கட்டாயப்படுத்திப் பறிமுதல் செய்தால் அது குற்ற முறையிலான கையாடல் ஆகும்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு தினங்களாக அடை மழை

## வெளி இடங்களுடனான போக்குவரத்து துண்டிப்பு

மட்டக்களப்பு,பெப்.4

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களாகப் பெய்துவரும் அடை மழையை அடுத்து மட்டக்களப்புக்கும் வெளி இடங்களுக்கும் இடையிலான போக்குவரத்து நேற்றுத் தடைப்பட்டிருந்தது.

மன்னம்பிட்டிப் பகுதியில் பிரதான வீதிக்கு மேலாக மழை வெள்ளம் பாய்ந்து செல்வதாலேயே வீதிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் ஏனைய இடங்களில் இருந்து நேற்று மட்டக்களப்பு நோக்கி வந்த வாகனங்கள் அனைத்தும் மன்னம்பிட்டிக்கு அண்மையில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டன.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும்

நடத்தும்





விக்ரம் - ராஜன் - கங்கு

ஞாபகார்த்த

*கிரிக்கெட் சுற்றுப்போட்டி இறுதியாட்டம்*

யாழ்.பல்கலைக்கழக அணி

எதிர்

யாழ்.ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம்

பிரதமவிருந்தினர்: திரு.அ.பஞ்சலிங்கம்
*(முன்னாள் அதிபர்-கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி)*

கௌரவ விருந்தினர்: திரு.பொ.கமலநாதன்
*(அதிபர் - கொக்குவில் இந்துக் கல்லூரி)*

இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்.

காலம்: இன்று (04-02-2001) ஞாயிற்றுக்கிழமை.

நேரம்: 9.00a.m. (S.L.T)

வளர்மதி முன்னேற்றக் கழகமும்
சனசமூக நிலையமும்
*சம்பியன் லேன்,*
*கொக்குவில்.*

(சி15142)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மணிவிழாக் காணும் நாயகன்

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்** அவர்களைப்

(உயர் பட்டப்படிப்புகள் ஆய்வுபீட பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

*பாராட்டி வாழ்த்துகின்றோம்*

யாழ்.பல்கலைக்கழக எழுதுவினைஞர், தொழில் நுட்பவியலாளர் ஒன்றியம்

அனுசரணையாளர்:-

**கஜமுகா ஹாட்வெயார்ஸ்**

(C/15145) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

*உங்கள் முக இலட்சணத்திற்கேற்ப!*
*விழுந்த பற்களுக்கு புதிய பற்கள் பொருத்தவும்*
*மிதந்த பற்களுக்கு கிளிப் போடவும். தன்னிகரில்லாத தனிப்பெரும் ஸ்தாபனம்*

## எரிக்கணேஷ்

மூக்குக் கண்ணாடி அகமும்,
பல் கட்டுமிடமும், மருந்தகமும்,
தொலைத் தொடர்பு சேவை நிலையமும்
566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
*✲ பாடசாலை மாணவர்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும்.*

(c/15151)

## வடமராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி

நெல்லியடி, - கரவெட்டி.

### அறிவித்தல்

வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி 05-11-1993ல் கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் ஒரு கூட்டுறவுச் சங்கமாக J/P 2153 இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டு இயங்கிவருகின்றது. மேற்படி கொத்தணியுடன் 08-01-2001 வரை நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்களின் நிமித்தம் கொத்தணியின் வருமதி, செல்மதிகள் அனைத்துக்கும் சம்பந்தப்பட்டவர்கள் கொத்தணியுடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

*தலைவர்*
வி.ஸ்ரீராமச்சந்திரா.

(C/15148)

## சமுர்த்தி செயலணி கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.4

இணுவில் வடகிழக்கு (ஜே/190) கிராம அலுவலர் பிரிவுக்கான சமுர்த்தி செயலணியின் கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு மேற்படி கிராம அலுவலரின் அலுவலகத்திலும் -

உடுவில் மத்தி (ஜே/184) கிராம அலுவலர் பிரிவுக் கான சமுர்த்தி செயலணியின் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையிலும் -

நடைபெறும் என சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அறிவித்துள்ளனர். (உ-7)

ஆரம்பமாகிறது!

**விஞ்ஞானம்**
**O/L, GR.10,GR.9**

குடாநாட்டில் மீண்டும்

**குமரன்**

கல்வி நிலைய வகுப்புக்கள்

*பின்வரும் இடங்களில் கற்பிக்க உள்ளதால் விரும்பும் கல்வி நிலையங்கள் தொடர்பு கொள்ளவும்.*

- ✲ வடமராட்சி
- ✲ சித்தன்கேணி
- ✲ மானிப்பாய்
- ✲ கோண்டாவில்
- ✲ இணுவில்
- ✲ உடுவில்
- ✲ உரும்பிராய்
- ✲ கோப்பாய்
- ✲ சுன்னாகம்

விவரங்கள் 01.02.2001 'உதயனின்' கடைசிப் பக்கத்தில்

(83667)

**SHAMROCK**

J/ஈச்சமோட்டை வீதியில்
Gr.4 முதல் O/L வரை
ஆரம்பம் - 07-02 Wed 3p.m.
(ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)

**A/L 2002-IN ORGANIC CHE.-Mr.KARAN**

(C/15149)

**யாழ். கல்வி நிலையம்**

*மானிப்பாய்வீதி. ஆறுகால்மடம்.*

**சிங்களம்**

BY:- லீலா கிருஷ்ணன்
*ஆரம்பம்:* இன்று 04-02-2001
நேரம்:- புதிய நேரம் 1.00 மணிக்கு

(83728)

**ராஜா**

யாழ்ப்பாணம்
மாதவன், ஷாலினி
மற்றும் பலர் நடிப்பில்

**அலைபாயுதே**

காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே.)
நாளை 05.02.2001 முதல்
**வல்லரசு**

(c/15058)

**லஷ்சுமி** இணுவில்

கடைசி வாரமாக
விஜயகாந்த்,மீனா நடித்த

**வானத்தைப் போல**

*(நீல்ஸ்)*
இனிய பாடல்கள் நிறைந்தது.
*(காட்சிகள்: 11.00, 2.30 (புதிய நேரம்)*

(83746)

**நாகம்ஸ்**


சுன்னாகம்
அர்ஜீன், ரம்பா, ரகுவரன், கபாலி

**சுதந்திரம்**

(நீல்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)

(C/15135)

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 - 04 - 1920 | 04 - 02 - 1985 |

### அமரர் நாராயணசாமி இராமசாமி

அன்பின் திருவுருவாய் ஆண்டுகள் பல
கடந் தோடியும் எம் நெஞ்சில்
நீங்காத இடம் பல பெற்றாய்
வந்தோரை வாழ்விக்கும் எம் தலைவன்
காலம் எம்மை மாற்றினாலும்
தங்கள் அன்புக்கு நிகருளதோ?
இந் நாளில் தங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி. சாந்தி நன்முக்தி பெறுவீர்கள்.

**கேதீஸ்வரன் ஸ்ரோர்ஸ்,**
இல.119, 39/2 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
விநாயகர் பென்சி
இல.9, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
மைத்துனர்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(83743)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 - 06 - 1918 | 17 - 01 - 2000 |

### அமரர் சுப்பிரமணியம் அம்பலவாணர்

(சட்டத்தரணி)

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்

*புத்தூர் கிழக்கு,*
*புத்தூர்.*

உங்கள் பிரிவால் உருகும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(83731)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் இராசரத்தினம்

ஆசாரியார் (மல்லாகம்)

மல்லாகம் காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல சக்கரவாள், பாட்டுவாள், அரிவுப்பட்டடை அமைப்பாளரான ஆறுமுகம் இராசரத்தினம் ஆசாரியார் நேற்று (03.02.2001) சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் ஆறுமுகம் - சரஸ்வதி தம்பதிகளின் ஏகபுத்திரனும், சிவபாக்கியம், பூமணியின் அன்புச் சகோதரனும், சிவபாக்கியத்தின் கணவரும், டகிலானந்தன், மோகானந்தன், ஜெயாநந்தன், சசிகலா, சத்தியதேவி, சலுஜாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெருசா, சுயா, கமல்றாஜ், தேனுஜா, கஜரூபன் ஆகியோரின் பேரனும், கோகிலாதேவி, சந்திரகலா, ஜெயந்தி, ரவிசங்கர், தயாநிதி, கம்சாநிதி, தர்சினிதேவி, கமல்றாஜ் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (04.02.2001) ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

*காளிகோயிலடி,*
*மல்லாகம்.*

தகவல்
இ.டகிலானந்தன்
(மகன்)

(83222)

### குருசு பாவிலுப்பிள்ளை

(நேசத்துரை)

பாஷையூரை நிரந்தர முகவரியாகவும் மூன்றாம்பிட்டியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட குருசு பாவிலுப்பிள்ளை (நேசத்துரை) வன்னியில் 30.01.2001 அன்று காலமானார்.

அன்னார் செபஸ்தியம்மாவின் அன்புக் கணவரும், பிலேந்திரன் (ஜேர்மனி), குலசிங்கம் (ஜேர்மனி), புஸ்பராஜா (ஜேர்மனி), அன்ரவி, லெபோன் (பிரான்ஸ்), தங்கராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தற்காலிக முகவரி*
*59, குருசோ வீதி,*
*சுண்டிக்குளி.*

தகவல்
வெ.மிக்கேல்

(83737)

உதயன்

## இன்றாவது...!

சுதந்திரம் மனிதனுக்கு மகிமையானது. சம்பந்தப்பட்ட நாட்டின் பிரஜை ஒவ்வொருவரும், தமது வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்திலும் தமக்குச் சுதந்திரம் உண்டு என்று உணரும் அளவுக்கு அது பரிணமிக்கவேண்டும். மக்கள் தமது வாழ்க்கையில் அனுபவிக்கும் அளவுக்கு சுதந்திரம் அவர்களிடம் ஊறவேண்டும். அதாவது உணர்வில், செயலில் — அனுபவிக்கும் தன்மையில் — சுதந்திரம் உள்ளுறைந்திருப்பது அவசியம்.

சுதந்திரம் என்பது அரசியல் சுதந்திரத்தையே பொதுவாகக் குறிக்கிறது: காரணம் தற்காலத்தில் மக்களுக்குரிய சுதந்திரங்கள் பலவும் அதிலிருந்தே பிறக்கின்றன; இளை விடுகின்றன. பொருளாதார சுதந்திரம், சமூக சுதந்திரம் மற்றும் பலவகைச் சுதந்திரங்களையும் உறுதி செய்வதாகவும் அவற்றுக்கு வலு சேர்ப்பதாகவும் அமைவதும் அரசியல் சுதந்திரமே.

இலங்கைக்கு அரசியல் சுதந்திரம் கிடைத்து 53 வருடங்களாகின்றன. ஆனால் அந்தச் சுதந்திரம்கிடைத்ததான உணர்வும், அனுபவமும் இந்நாட்டில் வாழும் ஒரு சாரா்ருக்குஇல்லை. சுதந்திரத்தின் விளைவாக கிடைக்க வேண்டிய உரிமைகளில் மிகப் பலவும் இன்றி அடக்கி ஆளப்படும் இனமாக வாழும் தமிழ் மக்களையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

அந்நியர் ஆட்சி — பிரிட்டிஷ் ஆட்சி—நீங்கி அரைநூற்றாண்டு கழிந்து விட்ட போதிலும், தமிழர்களுக்கு முற்றுமுழுதான அரசியல் சுதந்திரம் கைக்குவரவில்லை. அவர்கள் இன்னமும் சமத்துவமான பிரஜைகள் என்ற மட்டத்துக்கு உயர முடியவில்லை, சட்ட ரீதியாக வழங்கப்பட்ட உரிமைகள், சலுகைகளில் கூட செயலளவில் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே தமிழர்கள் நடத்தப்படுகின்றனர்; கணிக்கப்படுகின்றனர்.

தமிழர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் வழங்கப்படவில்லை என்று — அவர்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன என்று—இப்போதைய ஜனாதிபதி நேர்மையுடன் ஒப்புக்கொண்டிருந்தார். எனினும் தமது முதலாவது ஆறு வருடப் பதவிக் காலத்தில் தமிழர்களுக்குரிய நியாயமான உரிமைகளை அவர் வழங்கவில்லை.

தமிழர்கள் தமக்கான அரசியல் உரிமைகள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலிருந்தே பிறக்க வேண்டும் என்று விழைகின்றார்கள். ஆனால் அரசாங்கமும் சிங்களத் தலைவர்களும் அதனை ஏற்றுக்கொள்வதாக இல்லை.

தாம் விரும்பும் ஒரு தீர்வைத் தமிழ் மக்கள் மீது திணிப்பதே அவர்களின் நோக்கமாக உள்ளது என்று தோன்றுகிறது.

எனினும் —

தமிழர்களுக்கும் நிறை சுதந்திரம் கிடைத்துவிட்டது என்ற பாவனையில் வடக்கு — கிழக்கு உட்பட இன்றைய நாள் நாடளாவிய ரீதியாக சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடைபெறும்.

தேசிய ஒற்றுமை, இனநல்லிணக்கம் என்பன குறித்து நிறையவும் விச்சாகவும் இன்று பேசப்படும்; எழுதப்படும். பின்னர் எல்லாமே மறக்கப்பட்டு விடும். இது வழமையாகிவிட்டது.

இன்றைய சுதந்திர தினத்திலாவது தெற்குத் தலைவர்கள் தமிழர்களின் உரிமைகளை வழங்கி நீதியுடனான சமாதானத்தை உருவாக்குவது குறித்து சிந்திப்பார்களா?

# புலிகளைத் தடை செய்யும் பிரிட்டிஷ் முயற்சியை ஆட்சேபிக்கின்றார்கள் மலேசியத் தமிழர்கள்

கொழும்பு, பெப். 4

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்வது குறித்து பிரிட்டிஷ் அரசு ஆலோசனை செய்து வருவதை மலேசியத் தமிழர்கள் கடுமையாக ஆட்சேபித்துத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசின் தூண்டுதலின் பேரிலேயே பிரிட்டன் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய ஆலோசித்து வருவதாகத் தெரிவித்து அதை வன்மையாக கண்டித்து அவர்கள்மலேசியாவில் உள்ள பிரிட்டிஷ் தூதுவருக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

நோர்வே அரசு போரிடும் தரப்பினரைப் பேச்சுக்குக் கொண்டுவருவதற்கு இது கால வரை எடுத்த சகல முயற்சிகளையும் இந்நடவடிக்கை வியர்த்தனமாக்கிவிடும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மலேசியத் தமிழர் சார்பில் பேராசிரியர் பீ. இராமசாமி அனுப்பியுள்ள இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் புலிகள் இயக்கம் நிபந்தனையற்ற பேச்சுகளுக்கு முன்வந்திருப்பதுடன் இச்செயல் முறையை இலகுவாக்கும் விதத்தில் போர் நிறுத்தத்தையும் அறிவித்துள்ளது. அதன் பின்னர் இன்று வரை சொந்தப் பாதுகாப்புக்காக அன்றி அவர்கள் அரசுக்கு எதிராகத் தாக்குதலைநடத்தவில்லை.

மலேசியாவில் வாழும் தமிழர்களில் பெரும்பாலானோர் உழைப்பாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் விடுதலைப் புலிகள் தலைமையிலான தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை உளர்பூர்வமாக ஆதரிக்கின்றனர். இது ஒர் உணர்வுபூர்வமாக கார்மீக ஆதரவு ஆகும்.

### இந்திய அமெரிக்கத் தடைகளால் மோசமான விளைவு

இந்தியாவும், அமெரிக்காவும் விதித்த தடை எவ்விதத்திலும் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க உதவவில்லை. அது யுத்தத்தில் ஈடுபட்டுள்ள தரப்பினரின் நிலைப்பாடுகளை மேலும் மோசமாக்கி மரணத்தையும், அழிவையுமே கொணர்ந்துள்ளது

பிரிட்டனின் நடவடிக்கை இந்த உதாரணங்களைத் தொடருவதாக அமைந்து விடக்கூடாது மாறாக அவர்களில் சமாதானச் செயல் முறைக்கு ஊக்கமளிக்கும் பெருந்தன்மைமிக்க ஒன்றாக விளங்க வேண்டும். தடையொன்று எழுந்தால் அது சமாதானச்செயல்முறையைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை நோர்வே தரப்பினருக்குமறுப்பதாகவே அமையும்.

மேலும் இத்தகைய ஒரு தடை இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் செயற்படும் ஆயிரக் கணக்கான மனிதாபிமான அமைப்புக்களின் பணிகளையும் பாதிக்கும். இவற்றுட் பல விடுதலைப் புலிகள் அமைப்பை பிரதிநிதித்துவப் படுத்தும் 'போலி' அமைப்புக்களாக முத்திரை குத்தப் படும். இலங்கையின் வெளிநாட்டுத் தூதரங்கள் இத்தகைய வேலைகளிலேயே இப்போது முனைப்பாக ஈடுபட்டுள்ளன.

பிரிட்டன் முன்னாள் குடியேற்றவாத சக்தி என்ற வகையில் இலங்கைத் தமிழர்பால் ஒரு தார்மீகப் பொறுப்புணர்வைக் கொண்டுள்ளது. இதனை பிரிட்டன் மறந்துவிடக்கூடாது—என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (க-6)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, பெப். 4

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான — ஆண்களுக்கான — கபடிப் போட்டி நாளை திங்கட்கிழமை கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்திற்கு அருகில் நடைபெறும்.

போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள அணிகள் வருமாறு;

கொக்குவில் பொற்பதி வி. க. எதிர் திருநெல்வேலி கலாமன்ற வி. க.

கந்தர்மடம் ஸ்ரீ கலைமகள் வி. க. எதிர் நல்லூர் சிக்கொக்ஸ் வி. க.

ஜொலிஸ்ரார் வி. க. எதிர் மூடமாவடி ஞான வைரவர் வி. க. (க-86)

## குஜராத் மக்களுக்கு உதவ கோருகின்றார் வரதர்

யாழ்ப்பாணம், பெப். 4

''பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட குஜராத் மக்களின் துன்பத்தில் நாமும் பங்கு கொண்டு, எம்மால் முடிந்த அளவு உதவிகளைத் திரட்டி வழங்குவதே எமது சகோதரத்துவப் பண்பாகும்.''

குஜராத் மாநிலத்தில் அண்மையில் ஏற்பட்ட பூகம்பத்தினால் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து வடக்கு — கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், ஈ. பி. ஆர். எல். எவ்வின் (வரதர் அணியின்) தலைவருமான அ. வரதராஜப் பெருமாள் விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தியாவில் குஜராத் மக்கள் ஒரு லட்சம் பேர் பூகம்பத்துக்குப் பலியாகியுள்ளனர். இன்னும் பல்லாயிரக் கணக்கானோர் அங்கவீனர்களாகவும், அநாதைகளாகவும், பயங்கர அனுபவங்களுடன் நொந்து கொண்டிருக்கிறார்கள்.

துன்பக் கடலில் மிதந்து கொண்டிருக்கும் குஜராத் மக்களுக்கு எமது ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலாசாரத்தாலும், பாரம்பரியத்தாலும் வரலாற்று ரீதியான எமது மூலவேராகிய இந்திய மண்ணில் ஏற்பட்டுள்ள இந்த அனர்த்தத்துக்கு இலங்கையின் சகல சமூக அரசியல் சக்திகளும் தமது அனுதாபத்தைத் தெரிவித்து, துன்பத்தில் ஆழ்ந்து கிடக்கும் மக்களின் துயரங்களைப் பகிர்ந்து கொள்வதோடு ஒவ்வொருவரும் தம்மாலியன்ற உதவிகளை வழங்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம் — என்று அதில் உள்ளது. (உ-7)

## யூரியா, அமோனியம் சல்பேற் உரவகைகள் விலை குறைப்பு

யாழ்ப்பாணம், பெப். 4

யாழ். மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி யூரியா மற்றும் அமோனியம் சல்பேற் ஆகிய உரவகைகளில் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் 660 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட யூரியா 630 ரூபாவாகவும் 850 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட அமோனியம் சல்பேற் 810 ரூபாவாகவும் விலை குறைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலத்தில் இவற்றை எடுத்துவருவதற்குரிய கப்பல் கட்டணம்குறைந்த போதிலும் டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளது. இவ்வாறான நிலையிலும் விவசாயிகளின் நலனைக் கருத்திற் கொண்டு இவற்றைக் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி உரவகைகள் தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதிக் கமநலசேவை நிலையங்களுடன் தொடர்பு கொண்டு இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)

## எதிர்ப்புப் பிரசுரங்கள்

இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலான வாசகங்கள் அடங்கிய பிரசுரங்கள் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பெயரில் நேற்று யாழ். பல்கலைக் கழகத்தின் விளம்பரப் பலகைகளில் ஒட்டப்பட்டிருந்தன. (உ-10)

## படையினரின் அனுமதியுடன்

## மாவிட்டபுரத்தில் இம்முறை தைப்பூச திருவிழாவுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 4

மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலின் படையினரின் அனுமதியுடன் எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை தைப்பூசத் திருவிழாவைச் சிறப்பாக நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தைப்பூசத் தினமன்று பக்தர்கள் காலை 8 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை ஆலயம் சென்று திரும்பிவர வசதியாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

காலை 8 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடரும் விசேட பூசைகளை அடுத்து காலை 10.30 மணிக்கு சண்முகப்பெருமானின் மஞ்ச ஊர்தி பவனியும் நண்பகல் 1 மணிக்கு மகேஸ்வர பூசையும் நடைபெறும். (க-15)

## பிணை அனுமதி

நெல்லியடி பெப். 4

நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த மர்மப் பொருள் வெடித்து, குடும்பஸ்தர் ஒருவர் காலை இழந்து—மேலும் இருவர் படுகாயம் அடைந்தமை தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த ஐவரை, தலா பத்தாயிரம் ரூபா காசுப் பிணையிலும், 15 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்லுமாறு, பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

கடந்த டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி துன்னாலை தெற்கில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக, இதே இடத்தைச் சேர்ந்தவர்களான, கோணேசன் தங்கராசா (வயது 40), கோணேசன் கனகன் (வயது 45), வேலன் சௌந்தரராஜா (வயது 38), தங்கராசா தகிராகன் (வயது 28), கோவிலன் தவராஜா (வயது 39) ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்விடயம் நேற்று முன்தினம் மீண்டும் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேகநபர்களுக்கு நீதிவான் பிணை அனுமதி வழங்கினார். (உ-109)

## விளக்கமறியல்

அகதி முகாமில் தங்கியிருந்த பெண்மீது பாலியல் வல்லுறவு புரிந்ததாகக் கூறப்படும் இளம் குடும்பஸ்தர் ஒருவரை, இருவார காலம் விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கரவெட்டி நாவலர் மடம் அகதி முகாமில் வசித்து வந்த குடமியன் வராணியைச் சேர்ந்த — விக்கினேஸ்வரன் செல்வராணி (வயது 40) என்பவர் இனந் தெரியாத துப்பாக்கி நபரினால் கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டதாக அவரது கணவன் நெல்லியடிப் பொலீஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக, விசாரணைகளை மேற்கொண்ட நெல்லியடிப் பொலீஸார், அந்த முகாமில் வசித்து வந்த நாகமுத்து கஜேந்திரராஜ் (வயது 28) என்பவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து, கடந்த 31 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில், ஆஜர் செய்த சமயம், இம் மாதம் 9 ஆம் திகதி வரை அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ-109-173)

## நாளை

தை 23

திங்கட்கிழமை

திதி: துவாதசி

முன் இரவு 8. 29 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை

பின் இரவு 1.32 வரை.

சுபநேரம்: 12.35 — 2.05

ராகுகாலம்: 7.35—9.05

(பகலுக்கும் இரவுக்கும்)

பழைய நேரப்படி

## உதயவாக்கு

நியாயத்தைக் கடைப்பிடிப்பவன் பொறாமையின் மத்தியிலும் முன்னேறுவான்.

# துயர் பகிர்கின்றோம்

முதலாம் வருட A பிரிவு மாணவன்
**திரு. கு. உதாகரனினதும்**
பௌதிகவியற்றுறை செயன்முறை காட்டுநர்
**செல்வி கு. பிருந்தினியினதும்**
அன்புத் தாயார்

## திருமதி விமலாதேவி குருசாமி

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**முதலாம் வருட (A) மாணவர்கள்**
**விஞ்ஞானபீடம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(83733)

---

வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகார சபை

## கைத்தொழில் நிலையங்கள் பற்றிய தகவல் சேகரிப்பு

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் தற்போது இயங்குவனவும் அன்றி முன்னர் இயங்கி கலவரங்களால் பாதிப்படைந்து மூடப்பட்ட கைத்தொழில்களை மீளவும் நிறுவி ஊக்குவிக்கும் நோக்கமாக கீழ்க்குறிப்பிட்ட தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. இதில் அக்கறையுள்ள தொழில் அதிபர்கள் தங்கள் தொழிற்சாலை பற்றிய விவரங்களைத் தந்துதவுமாறு வேண்டப்படுகின்றனர். விவரங்கள் பெப்ரவரி 20 ஆம் திகதிக்குள் கிடைக்குமாறு எமக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:-

**CHAIRMAN**
**Resettlement & Rehabilitation Authority of The North**
16/3, Cambridge Place, Colombo - 7

கொடுக்கப்பட வேண்டிய விவரங்களாவன:-

1. தொழில் நிறுவனத்தின் பதிவுப் பெயர்:- ..........
2. தொழிற்சாலை விலாசம்:- ..........
3. தொழில் அதிபர் பெயரும் விலாசமும்:- ..........
4. தொலைபேசி இலக்கம்:- ..........
5. உற்பத்தி செய்யப்படும் பொருள்:- ..........
   உபஉற்பத்திப் பொருள்:- ..........
6. வருடாந்த உற்பத்தி மதிப்பீடு:- ..........
7. காணி விஸ்திரணம்:- .......... பரப்பு
8. காணி விஸ்திரணம்:- .......... சதுர அடி
9. இயந்திர உபகரணங்கள் விவரம்:- ..........
   - ★ மின்சாரத்தால் இயங்குபவையா? அன்றி டீசல் என்ஜினால் இயங்குபவையா? ..........
   - ★ இயந்திரங்கள் இன்றி கைப்பொறியால் இயங்குபவையா? ..........
   - ★ இயந்திரங்கள் புதிதாக வாங்க வேண்டுமாயின் விவரங்களும் விலையும்:- ..........
11. கட்டடங்கள் இயந்திரங்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டனவா? ..........
12. தற்போது உற்பத்தி உண்டாயின் எத்தனை வீதம்? ..........

   0 [ ]
   25 [ ]
   50 [ ]
   75 [ ]
   100 [ ]

13. நட்டஈடு காப்புறுதி ஸ்தாபனத்தால் அல்லது வேறு எப்படியாவது பெறப்பட்டதா? ..........
14. மீள நிறுவப்பட்டால் எத்தனை தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டும். ..........
15. உற்பத்திக்கான மூலப்பொருள்கள் எவை? ..........
16. மூலப்பொருள்கள் பெறக்கூடியனவாய் இருக்கின்றனவா? ..........
17. காலாண்டுக்கான மூலப்பொருள்களின் பெறுமதி:- ..........

**பொது முகாமையாளர்**
**RRAN.**

2001—02—01 (சி/15130)

---

# பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 4

இம் மாதம் 2 ஆம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:—

**சங்கானை**

(161551ஏ), (173042ஏ), (175113ஏ), (175113பி), (175113சி), (176993ஏ), (176993பி), (176993சி), (178595ஏ), (178595பி), (178669ஏ), (178669பி), (178938ஏ), (178938பி), (179116ஏ), (179259ஏ).

**நல்லூர்**

[1179034பி], [158958ஏ], [172861ஏ], [172861பி], [175919ஏ], [175919பி], [178894ஏ], [179034ஏ], [179193ஏ], [179193பி], [179333ஏ], [179338ஏ], [179338பி], [179490ஏ], [179490பி], [179490சி], [181408ஏ], [181427ஏ].

**சண்டிலிப்பாய்**

[175016ஏ], [175016பி], [176678ஏ], [176820ஏ], [176820பி], [176837ஏ], [176954ஏ], [176954பி], [176954சி], [178655ஏ], [178851ஏ], [178886ஏ], [179040ஏ], [179093ஏ], [179125ஏ], [179171ஏ], [179341ஏ], [179426ஏ], [179426பி], [179440ஏ], [179440பி], [179440சி], [179443ஏ].

**தெல்லிப்பழை**

[175727ஏ], [179470ஏ],

**உடுவில்**

[172994ஏ], [172994பி], [173112ஏ], [176840ஏ], [177 07ஏ], [178657ஏ], [178683ஏ], [178733ஏ], [178768ஏ], [178768பி], [178808ஏ], [178974ஏ], [178974பி], [179046ஏ], [170051ஏ], [179051பி], (179067ஏ), (179106ஏ), (179106பி), (179121ஏ), (179121பி), (179122ஏ), (179168ஏ), (179222ஏ), (179251ஏ), (179423ஏ), (179498ஏ), (181423ஏ), (181443ஏ), (181446ஏ), (181446பி), (181456ஏ), (181456பி), (181515ஏ), (181515பி), (181515சி).

(க—10)

## வருடாந்தக் கூட்டம்

வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சி. நடராசா தலைமையில் சங்கப் பணிமனையில் நடைபெறும்.

[க-10]

## 3 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம் மணியம் கட்டடத்திலுள்ள வடக்குப் புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அதிகாரசபையின் அலுவலகத்தில் கொழும்பு செல்வதற்கான பயணச்சீட்டுப் பெறுவதற்காகக் காத்து நின்ற மூன்று இளைஞர்கள் கடந்த புதன் முற்பகல் 11மணியளவில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

அச்செழு, புலசெட்டி., நீர்வேலியைச் சேர்ந்தவர்களான ஜீவராஜா ரஜிகரன் (வயது 21), நன்னித்தம்பி சிறீரங்கன் (வயது 21), பொன்னுத்துரை சசிகுமார் (வயது 22) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

அவர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளை அலுவலகத்தில் உறவினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மூன்று இளைஞர்களும் தற்பொழுது 512 பிரிகேட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இக் கைதுகள் தொடர்பாக படையினரால் ரசீதுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

(உ-5)

---

# சித்த மருத்துவ மாணவர் கூட்டம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் அவசர பொதுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளதாக ஒன்றியத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

(க-10)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் செல்லையா துரைச்சாமி

[ஈஸ்வரன் அயன் வேக்ஸ்]

மலர்வு 21- 05- 1916 . உதிர்வு 17- 01- 2000

அன்பின் திருவுருவாய் ஆசையின் நாயகனாய் இன்பத்தின் ஊற்றாய் ஈன்ற - எமக்கு அருள் அளித்த -எம் ஆருயிரே! நீர் சென்று ஓராண்டு சென்றாலும் மாறாதுஎம்துன்பம்; மறையாது உம் நினைவு....

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இந்துக் கல்லூரியடி,
மானிப்பாய்.

[83730]

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 21 — 04 — 1921



விண்ணில் 17 — 01 — 2000

அமரர்

## கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளை

திதி: தைமாத பூர்வபக்க ஏகாதசி 4-2-2001

சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும், மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளை அவர்களே!

தாங்கள் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய சீர்மையை மாணவரும் பெற்றோரும் நினைந்து நினைந்து போற்றவும், சாவகச்சேரி நகரசபை அங்கத்தவராகவும், ஐக்கியநாணய சங்கத் தலைவராகவும் சேவை புரிந்தீர்கள். ஆலயங்களில் தர்மகர்த்தாவாகத் தொண்டாற்றிப் பரிபூரண வாழ்க்கை வாழ்ந்து இறைவன் திருவடி பெற்றீர்கள்.

பலன் கருதாது மனித நேயத்துடன் சேவை செய்த உங்களுக்கு திரு. ச. கெகநாதன் (வைத்திய கலாநிதி U K), திரு. ச. சிவலோகநாதன் (பொறியியல் கலாநிதி U.K) என்னும் இரு புகழ்பெற்ற புதல்வர்களை இறைவன் உவந்து அருளினார். ஆண்டு ஒன்றல்ல, பல ஆண்டு கழிந்தாலும் ஆறுமா எம் துயர்?

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**நண்பர்கள்.**

தகவல்:
திரு. சி. நாகலிங்கம்,
(பெறாமகன்),
கெருடாவில்,
சாவகச்சேரி.

(சி/15073)

# பேராசிரியர் சிவத்தம்பி பெற்ற விருது: பொருத்தமானவருக்குக் கிடைத்த பரிசு

பல்துறைப் புலமையாளரும், இலங்கைத் தமிழ் இலக்கியக் களத்திலே மிக மூத்த அறிஞருமாகிய பேராசிரியர் கா.சிவத்தம்பி பல சாதனைகளை ஈட்டியுள்ளார். அவருடைய புலமையும், அறிவுத் திறனும் அவரின் மாணவர்கள், உடன் புலமையாளர், தமிழ் இலக்கிய வல்லார், பொது மக்கள் ஆகியோருடைய மதிப்பினைப் பெற்றன. இத்தகைய புலமையினையும் அறிவுத் திறனையும் தமிழ்நாடு அரசு இனங்கண்டு அவற்றுக்கு மதிப்பீடாக திரு.வி.க. பரிசிலை பேராசிரியர் சிவத்தம்பிக்கு வழங்கியமை எங்கள் எல்லோருக்கும் பெருமைதரும் விடயமாகும்.

பொருத்தமான பரிசிலைப் பொருத்தமானவருக்கு வழங்கியமைக்கு தமிழநாடு அரசினை நாம் பாராட்ட வேண்டும். இதனை விரிவாக நோக்குவோம்.

பொருத்தமான பரிசு என்பதன் பொருள் என்ன? திரு.வி.கவுக்கும் எங்கள் நாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

ஈழநாட்டில் இருந்து பல அறிஞர்கள் தமிழ்நாட்டிலே வாழ்ந்து, தமிழுககுத் தொண்டாற்றி பெரும் புகழ் ஈட்டியுள்ளார். தமிழ் நாட்டினர் ஈழநாட்டாரின் புலமையினை நெடுங்காலமாகப் பேணிப் புகழ்ந்து வந்துள்ளனர். நல்லை நகர் ஆறுமுகநாவலருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கப்பட்டது தமிழ்நாட்டிலே ஆகும். மட்டக்களப்பு வித்தகர் முத்தமிழ் அறிஞர் சுவாமி விபுலானந்தரின் அறிவினை மெச்சி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியராகத் தமிழ் நாடு ஏற்றுக் கொண்டது. "திறமான புலமையெனில் பிற நாட்டார் அவை வணக்கம் செய்ய வேண்டும்" என்ற பாரதியின் கூற்றுக்கு அமைய ஈழநாட்டார் கல்வித் தரம் தமிழ்நாட்டால் மதிக்கப்பட்டது.

இத்தகைய சிறப்பு ஈழத்தமிழுக்கு ஏற்படுவதற்கு காரணமாயிருந்தவர்களுள் பருத்தித்துறை மேலைப் புலோலியைச் சேர்ந்த நா.கதிரவேற்பிள்ளையும் ஒருவராவார். அவருடைய திறமைகள் பலவகைப்பட்டன; அன்னார் தமிழுக்கும், சைவததிற்கும் ஆற்றிய தொண்டு சிறப்புடன் பேசப்படத் தக்கது. கதிரவேற்பிள்ளையின் வரலாற்றினை எழுதும் ஆசிரியர்கள் யாவரும் அவருடைய பேச்சுத் திறனைக் குறியாது விட்டிலர். அவருடைய பேச்சினைக் கேட்டு மகிழ்ந்து, அதன்பால் ஈர்ப்புண்டவர் திரு.வி.க.



ஆவர். எனவே, திரு.வி.க என்ற பேரிலே ஒரு பரிசினை ஒரு ஈழத்தவருக்கு வழங்கியமை பொருத்தமானதே.

ஈழத்தவரான பேராசிரியர் சிவத்தம்பி இப்பரிசைப் பெறுவதற்கு எவ்வாறு பொருத்தமானவராகிறார்? சதாவதானி கதிரவேற்பிள்ளையின் இடமாகிய வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் பேராசிரியர். சதாவதானி தமிழகத்திலே பலரது மதிப்பைப்பெற்றதுடன் அங்கிருந்து பல எழுத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். இவரைப் போன்றே பேராசிரியர் சிவத்தம்பியும் தமிழகத்திலே பல அறிஞர்களுடைய மதிப்பையும் பெற்றுள்ளார்.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

அங்குள்ள பல்கலைக்கழகப்பட்டப் பின் படிப்பு ஆய்வேடுகள் சில பேராசிரியரின் தமிழியற் பணிகளை பொருளாகக் கொண்டுள்ளன. அவர் அங்கு பல உயர் கருத்தரங்குகள், மாநாடுகளிலே பங்குபற்றிச் சிறப்பான, பொருத்தமான கருத்துக்களைக் கூறி வருகின்றார். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திலே முதுநிலை ஆய்வுப் பேராசிரியராக இருந்த காலத்திலேதான் Period ization of the Liter-ary Histroy Of Tamil என்னும் நூலை எழுதினார். அதுதான் பின் 'தமிழின் இலக்கிய வரலாறு' என்று தமிழிலே வெளியாகியது. எனவே இப்பொருத்தப்பாடு அவருக்கு இப்பரிசினை வழங்க வைத்தது. தமிழ்நாடு அரசு திரு.விக. பரிசிலைப் பேராசிரியர் சிவததம்பிக்கு அளிப்பதற்கு, பேராசிரியரிடம் அப்பரிசினைப் பெறுந்திரு அமைந்து கிடந்ததே காரணமாகும். ஆய்வு அடிப்படையிலும் சிந்தனைத் திறன்களை வெளிப்படுத்துவனவுமான கட்டுரைகளையும் நூல்களையும் பேராசிரியர் எழுதியுள்ளார். அவ்வெழுத்துக்கள் பலராலும் மதித்துப் போற்றப்பட்டன. மிகப் பிரசித்திபெற்ற நிறுவனங்களாகிய தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம், உப்சாலாப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், கேம்பிறிச் பல்கலைககழகத் தென்னாசிய ஆய்வுமையம், கலிபோர்னியாப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கு பேராசிரியர் சிவத்தம்பி வருகைப் பேராசிரியராகவோ, விருந்துப் பேராசிரியராகவோ அழைக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாட்டிலே பல் ஆய்வு மாணவர்கள் அவருடைய ஆய்வு வழிகாட்டலைப் பெற்றுள்ளனர்.

உலகத் தமிழாராட்சி நிறுவன இயககுநர் டாக்டர் இராமர் இளங்கோ, டாக்டர் கோ.சுந்தரமூர்த்தி, டாக்டர் பொன். கோதண்டராமன், டாக்டர்.எஸ். மணவாளன், டாக்டர் இரா.இளவரசு, டாக்டர் குழந்தை சுவாமி போன்றோர் பேராசிரியர் சிவத்தம்பியினை மதித்து நட்புடன் போற்றுவார்கள். இத்தகைதிரு தமிழ்நாடு அரசு இவருக்கு விருது வழங்குவதற்குக் காரணமாயிற்று. அவருக்கு வழங்கப்பட்ட விருதினை நாம் ஒவ்வொருவரும் பெற்றதாகப் பெருமைப்படுகிறோம். தமிழக அரசுக்கு நன்றி கூறுகிறோம். ★

## சுதந்திரம் வேண்டும்!!

சுதந்திரம் வேண்டும்!!
நிரந்தர மாயிங்கு
சுதந்திரம் வேண்டும்!
நிரந்தர மாயென்றும்
சுதந்திரம் வேண்டும்!!

இன்றிங்கு நிகழ்ந்திடும்
இன்னல்கள் மறைந்திட
இன்றிங்கு புரள்கின்ற
துன்பங்கள் மறைந்திட

இன்றிங்கு இடம்பெறும்
அவலங்கள் தொலைந்திட
இன்றிங்கு நடபெறும்
அழிவுகள் தொலைந்திட

இன்றிங்கு படர்கின்ற
காரிருள் கரைந்திட
இன்றிங்கு தொடர்கின்ற
பே(ா)ரிடர் குலைந்திட

உரிமைகள் அற்றவர்
எனும்நிலை மறைந்திட
உரிமைகள் பெற்றவர்
எனும்நிலை மலர்ந்திட

உரிமைகள் பெற்றுநாம்
மதிப்புடன் வாழ்ந்திட
பெருமைகள் மிக்கதோர்
இனமென வாழ்ந்திட

எம்முடன் அடுத்தவர்
இணைந்திடப் பொருத்தமாய்
எம்மையும் அடுத்தவர்
அணைத்திடப் பொருத்தமாய்

எங்களின் ஆட்சியை
நாங்களே நிகழ்த்திட
எங்களை மற்றவர்
ஆள்வதைத் தடுத்திட

எங்களின் உரிமையை
அடுத்தவர் போற்றிட
அடுத்தவர் உரிமையை
நாங்களும் போற்றிட

அவரவர் நிலத்தினில்
அவரவர் வாழ்ந்திட
அவரவர் நலத்தினை
அவரவர் ஆண்டிட

எங்கள் தமிழினை
வளர்த்திடப் பொருத்தமாய்
எங்கள் கலைகளை
பெருக்கிடப் பொருத்தமாய்

எல்லாரும் ஓர்தரம்
எனும்நிலை மலர்ந்திட
எல்லாரும் ஓர்குலம்
எனும்நிலை மலர்ந்திட

சுகம்தரவே இங்கு
சுதந்திரம் வேண்டும்!
வரம்தரவே இங்கு
சுதந்திரம் வேண்டும்!!

*- முருகு -*

# இறைவனை மறந்த போதெல்லாம் மக்களை இயற்கை அழிவுகள் சூழ்ந்தன

நவீன உலகில் புதிய கண்டுபிடிப்புக்களால் மனிதன் சாதனை படைக்கின்றான். அதேவேளை அவனது சாதனைகள் மனித சமுதாயத்துக்கு சவால்களாகவும் அமைந்து விடுகின்றன. ஒவ்வொரு நாடும் தமது வல்லமையை வெளிக்கொணரச் செய்த ஆய்வுகள் அண்மையில் அப்பாவி மக்களின் உயிர்களைக் காவு கொள்ளச் செய்ய தூண்டு கோலாக அமைந்தன (குஜராத் நிலநடுக்கம்) என்ற செய்திகளும் ஆய்வுக்குள்ளாகியுள்ளன. மனிதன் தனது வல்லமையில் நின்று பல காரியங்களை நிறைவேற்றினாலும், அவன் தனக்கு மேலுள்ள ஒரு சக்தியின் வெளிப்பாடே என்பதைப் பல வேளைகளில் மறந்து விடுகின்றான். அதனாலே அவன் தன்னை அறியாமலே பல அழிவுகளுக்கு ஆளாவதை வரலாற்றிலே காண்கின்றோம்.

இயேசு ஒருமுறை தமது சீடர்கள் வலைவீசிக் கொண்டிருப்பதைக் கண்டு, அவர்களுடன் உரையாடினார். சீடர்கள் 'இரவு முழுவதும் வலை வீசியும் மீன் ஒன்றும் பிடிக்காமையால் மனம் வாடி இருந்தனர். அப்போது இயேசு அவர்களிடம் "ஆழத்துக்குத் தள்ளிக்கொண்டு போய் மீன் பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்" என்றார். சீடர்களும் அவ்வாறே செய்தனர். ஏராளமான மீன்பாட்டைக் கண்டு வியந்தனர். இங்கு சீடர் தமது ஆற்றல்களால் முடியாத செயல், இறைவனின் வார்த்தையால் முடிந்தது என்பதை உணர்ந்தார்கள். இன்று எம்மிடையே காணப்படும் நிலையும் ஆன்மீக வறுமையே மனிதன் அழிவுகளை அல்ல; தனது அதிகாரத்தை நிலைநிறுத்த விளைவதே இயற்கை எமக்குக் கற்பிக்கும் பாடமாகும். பழைய ஏற்பாட்டிலும் இறைவனை மறந்து மக்கள் வாழ்ந்த போதெல்லாம் இயற்கை அழிவுகளால் துன்பப்பட நேர்ந்தது.

**ஞாயிறு நற்பிரசாதம்**

நவீனத்துவத்தின் கண்டுபிடிப்புக்கள் மனிதனைக் கடவுளாக்கிக் கொண்டிருக்க, காலத்தின் அறிகுறிகள் கடவுள் இருக்கின்றார் என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. மனிதன் எவ்வளவு தான் முயன்றாலும் கடவுளாக முடியாது. அவன் தன் சகோதரனை வஞ்சிக்கும் மட்டும் அவன் மனிதனாகவும் முடியாது. அவன் தன் அயலானை நேசிக்கும் போதே கடவுளின் பிரசன்னத்தைக் காணும் தகுதி பெறுகின்றான். அதுவரை அவனின் செயல்களுக்கான தண்டனையும் அவனை நிழல் போல் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இறைவன் எமக்குத் தந்த கொடை இயற்கையும், அதன் படைப்புக்களும். படைப்பின் பங்காளி மனிதனே. தீர்ப்புக் கூறவும், தண்டனை வழங்கவும் தகுதி உள்ளவர், இறைவன் ஒருவரே. எனவே சக உதிரம் உள்ள மனிதனை உதிரம் சிந்தும் செயல்களுக்கு உட்படுத்தாமல், உள்ளம் மகிழும் செயல்களுக்கு உட்படுத்தும்போது எம்மிடையே பகைமைக்குப் பதில், உறவு மலரும். இதனை நாம் சிறுவர்களுக்கு ஊட்ட வேண்டும். அவர்களின் உள்ளங்களைப் பண்படுத்த வேண்டும். மலரும் சமுதாயம் ஆன்மீக தாகமும், அன்புறவும் கொண்டதாக அமைய அரும்புகளுக்கு அடியெடுத்துக் கொடுப்போம். அன்பு சமுதாயத்தை உருவாக்க உழைப்போம்.

*சகோதரன் அன்ரனி பீற்றர்.*

# இறுதிவரை உறுதியாக

பரந்து விரிந்துள்ள இந்த உலகிலே, பௌத்த சிங்களவர்களாகிய எங்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு நாடு, இந்தச் சின்னஞ்சிறு இலங்கைத் தீவுதான் -

நாங்களே இந்த மண்ணின் மைந்தர்கள்; பூமி புத்திரர்கள்--

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழர்கள், இந்த நாட்டின் ஆதி குடிகளல்லர்; அவர்களுக்குரிய நாடு, அயலிலுள்ள தென்னிந்தியாவே-

தாங்கள் சிறுபான்மையினர் என்பதை உணர்ந்து கொண்டு - வந்தேறு குடிகள் என்பதை ஏற்றுக்கொண்டு - நாங்கள் சொல்பவற்றைக் கேட்டுக் கொண்டு - நாங்கள் கொடுப்பவற்றைப் பெற்றுக்கொண்டு - 'அடக்க ஒடுக்கமாக' அவர்கள் வாழ்ந்தால் எங்களுடைய இந்த நாட்டில் அவர்கள் தொடர்ந்தும் வாழலாம் -

அதிகாரப் பகிர்வு - சமஷ்டி ஆட்சி அமைப்பு - சுதந்திரத் தமிழ் ஈழம் என்பவை எல்லாம் வெறும் பகற் கனவுகள் என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் -

சாத்வீகமான முறைகளிற் கேட்டாலும் சரி, சண்டை மூலம் நெருக்குதல் கொடுத்தாலும் சரி இவற்றுள் எவற்றையேனும் வழங்குவதற்கு இந்த நாட்டின் பெரும்பான்மையினரான நாம் ஒருபோதும் இணங்க மாட்டோம் -

இவற்றுள் சிலவற்றை வெளிப்படையாகச் சொல்லியும் பலவற்றையும் அவற்றுடன் ஒட்டிய வேறு சிலவற்றையும் மறைமுகமாகக் குறிப்பிட்டும் வருபவை -

சிஹல உறுமய, மக்கள் விடுதலை முன்னணி, பூமிபுத்ர, வீரவிதான போன்ற பேரினவாதக் கட்சிகள்.

எனினும் -

இத்தகைய சிந்தனைகள் இந்தக் கட்சிகளுக்கு மட்டும்தான் சொந்தம் என்று சொல்வதற்கு இல்லை.

நாட்டின் பிரதமரும், அமைச்சரவையிலுள்ள பொறுப்புவாய்ந்த சிலரும், பௌத்த பீடங்களைச் சேர்ந்த பலரும், எதிர்க்கட்சியிலுள்ள கணிசமானவர்களும் பயங்கரவாதத்துக்கு எதிரான அமைப்பினரும் -

இந்தச் சிந்தனைகளை பல்வேறு சந்தர்ப்பங்களில் - வெவ்வேறு தொனியில் - பிரதிபலித்து வருகின்றார்கள்!

நாட்டின் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் போன்றோர்கூட இத்தகைய சிந்தனைகளில் இருந்து முற்றுமுழுதாக விடுபட்டிருப்பதாகத் தெரியவில்லை!

இன்று நேற்றுத்தான் -

தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் முழுவீச்சிலே இடம்பெறத் தொடங்கிய பின்னர்தான் -

சிங்களத் தலைவர்களிடம் இந்தச் சிந்தனைகள் உருவாகத் தொடங்கின என்பதையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை!

சேர் ஜேம்ஸ் பீரிஸ், எவ்.ஆர்.சேனநாயக்க, அநகாரிக தர்மபால போன்ற ஆரம்பகாலத் தலைவர்களிடமும் -

டி.எஸ்.சேனநாயக்க, ஒலிவர் குணதிலக, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா போன்ற அடுத்தகட்டத் தலைவர்களிடமும் -

இத்தகைய சிந்தனைகள் இருந்தன என்பதை அவர்களுடைய செயற்பாடுகள் சில குறிப்பாகக் காட்டுகின்றன.

அரசியல் நெருக்கடி நிறைந்த காலகட்டங்களில் ஆசைவார்த்தைகளால் தமிழ்த் தலைவர்களை அரவணைத்து அவர்களின் ஆதரவைப் பெறுவதையும் -

நெருக்கடி நீங்கியவுடன் மோசமான முறையில் அவர்களின் முதுகிலே குத்துவதையும் -

சிங்களத் தலைவர்கள் தம் வழக்கமாக்கி வந்துள்ளனர்!

தமிழ் மக்களின் உரிமை சம்பந்தமாக -

சேர்.ஜேம்ஸ் பீரிஸ் - பொன்னம்பலம் சகோதரர்கள் ஆகியோருக்கிடையே ஏற்பட்ட உடன்பாடு -

பண்டா - செல்வா ஒப்பந்தம் -

டட்லி - செல்வா ஒப்பந்தம் -

போன்றவற்றைச் சம்பந்தப்பட்ட சிங்களத் தலைவர்களைக் கொண்டு ஒரு தலைப்பட்சமாகக் கிழித்தெறியச் செய்தது அவர்களை என்றுமே ஆட்டிப் படைத்தது இந்தப் பேரினவாதச் சிந்தனைகள் தாம்!

சமாதானத்துக்காக அரசின் கதவுகள் திறந்தபடியே இருக்கின்றன - புலிகளை நம்பமுடியாதபடியால், சண்டையைத் தொடர்ந்துகொண்டே சமாதானப் பேச்சையும் தொடங்குவோம் - என்ற மந்திரத்தை உரத்து உச்சாடனம் பண்ணிக்கொண்டே இரத்தப்பலியில் அரசு விடாப்பிடியாக ஈடுபட்டு வருவதற்கும் தூண்டுகோலாக இருப்பது இந்தப் பேரினவாதச் சிந்தனைகள் தாம்!

## மணி மண்டபம்

தமிழ்த் தலைவர்கள் தவறே செய்யவில்லை என்று நாம் சொல்ல வரவில்லை!

தமிழர்களின் உரிமைப் போராட்டத்திலே, காக்கைவன்னியர்களுக்கு என்றுமே "பஞ்சம்" ஏற்பட்டதில்லை!

தமிழ் மக்களும் தமிழ்த் தலைவர்களும் உறுதியாகவும் ஒற்றுமையாகவும் தம் உரிமைகளை வற்புறுத்திய வேளைகளில் பணத்தையும் பதவியையும் கண்டு பல்லிளித்த "சில்லறை"களால், அவர்களின் முயற்சிகள் படுதோல்வியைத் தழுவியிருக்கின்றன!

முடிவையே காணாமல், தமிழ் மக்களின் உரிமைப் போர் தொடர்ந்து கொண்டே போவதற்கும், மக்கள் தம் உயிரையும் உடைமையையும் இழந்துகொண்டே போவதற்கும் இத்தகைய சில்லறைகளின் பங்களிப்பும் கணிசமான அளவு இருந்து வந்துள்ளது என்பதையும் நாம் மறப்பதற்கில்லை!

ஆகவேதான் -

தமிழ் மக்களின் கோரிக்கைகளில் நீதி இருக்கின்றது - நியாயம் இருக்கின்றது - தர்மம் இருக்கின்றது - என்ற உண்மையைச் சர்வதேச சமூகம் சரியாக உணர்ந்து -

பல்வேறு வழிகளில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் -

'வெற்றி'யை ஈட்டுவதற்கு பேரினவாதச் சிந்தனைக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்காமல் -

தமிழ் மக்களின் உரிமைகளை வரையறுப்பதில் - வலியுறுத்துவதில் - இறுதிவரை உறுதியாகவும் ஒற்றுமையாகவும் நிற்கும்படி தமிழர் தலைவர்கள் ஒவ்வொருவரையும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*- சித்தன் -*

## பரந்தன் கெமிக்கல்ஸ் கொம்பனி லிமிடெட்

### சத்துணவு (திரிபோஷா) தயாரிப்பதற்கு வீடு / கட்டடம் வாடகைக்குத் தேவை

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு—கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் கீழ் இயங்கும் பரந்தன் கெமிக்கல்ஸ் கொம்பனி லிமிடெட்டுக்கு யாழ். நகரிலிருந்து 12 கிலோ மீற்றர் தூரத்தினுள் நீர், மின்சாரம், பிரதான வீதிக்கான போக்குவரத்து வசதிகள் கொண்டதும் 3000 சதுர அடிக்கு குறையாததும் களஞ்சிய வசதி கொண்டதுமான நல்ல நிலையிலுள்ள வீடு/ கட்டடம் சத்துணவு (திரிபோஷா) தயாரிப்பதற்கு உடன் வாடகைக்குத் தேவைப்படுகிறது. வீடு/ கட்டடம் வாடகைக்கு கொடுக்க விரும்பும் உரிமையாளர்கள் வீடு/ கட்டடம் இருக்கும் அமைவிடம், முகவரி, காணியின் விஸ்தீரணம், எதிர்பார்க்கப்படும் மாத வாடகை, குத்தகைக் காலம் போன்ற சகல விவரங்களும் கொண்ட விண்ணப்பத்தை 10—02—2001 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக எமது தலைமைக் காரியாலயத்திற்கோ அல்லது 53/4, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்கும் தற்காலிக காரியாலயத்திற்கோ அனுப்பவும்.

பொ. தியாகராசா
தலைவர்
பரந்தன் கெமிக்கல்ஸ் கொம்பனி லிமிடெட்.

100/25, ஸ்ரீஇராமநாதன் றோட்,
கொழும்பு - 13.
தொலை நகல் இல. 437831

(சி/15090)

## ஆலய மண்டப வேலைகள் ஆரம்பம்

அரியாலை, பெப். 4

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் தெற்கு மண்டபம் அமைக்கும் வேலைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

அதேசமயம் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இராஜ கோபுர அமைப்பு பணிகளைத் தொடங்குவதற்கும் பரிபாலன சபையினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(க-17)

## யாழ். கரையோர மக்கள் மீளக் குடியமர்வு


யாழ்ப்பாணம், ஜன. 4

மானிப்பாய், ஆனைக் கோட்டை, சாவற்கட்டு போன்ற பகுதிகளில் நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த யாழ். கரையோரப் பகுதி மக்களில் சிலர் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பி வருவதை அவதானிக்க முடிகிறது.

உழவு இயந்திரம், லான் மாஸ்ரர் போன்ற வாகனங்களில் அவர்கள் கிடுகுகள் மரங்கள் மற்றும் தளபாடங்கள் போன்றவற்றை ஏற்றி வருகின்றனர்.

(க-17)

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி தவமணிதேவி நடேசபிள்ளை
[தவம்]

தோற்றம் 10—03—1943 மறைவு 05—01—2001

எனது ஆருயிர் மனைவியே! நான் இனி யாரை தவம் என அழைப்பேன்; என்னையும் பிள்ளைகளையும் தவிக்க விட்டுச் சென்றீரே!

எங்கள் அருமை அம்மாவே!
இனியாம் எப்பிறப்பில் காண்போம்;
ஒருநொடிப்பொழுதில் எங்களைப்பிரிந்து சென்றீர்கள்.

பாசமிகு மாமியே! உங்கள் இனிமையான மொழியை எப்போ கேட்போம்?

எங்கள் அருமை அம்மம்மாவே!
எங்கள் எல்லோரையும் பாரினில் தவிக்க விட்டுச் சென்றீர்களே!

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு எமக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (04—02—2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
துயருற்றிருக்கும் கணவர்
சி. நடேசபிள்ளையும் குடும்பமும்
(சிமெந்துக் கூட்டுத்தாபன ஓய்வு பெற்ற ஊழியர்)

நிரந்தர விலாசம்;—
நெசவுசாலை வீதி,
வீமன்காமம்,
தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி:—
சோடாக்கொம்பனி ஒழுங்கை,
குளமங்கால்,
மல்லாகம். (83485)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக பௌதிகவியற்றுறையில் செயன்முறை காட்டுநராகப் பணிபுரியும்

செல்வி பிருந்தினி குருசாமி
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி விமலாதேவி குருசாமி

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

- பௌதிகவியற்றுறையினர்
யாழ். பல்கலைக்கழகம்.

(83727)

## உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் தைத் திங்கள் 23 ஆம் நாள் நாளை (05—02—2001) திங்கட்கிழமை முற்பகல் 7.00 மணி முதல் 8.30 மணி வரையுள்ள துவாதசி திதியும் திருவாதிரை நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய கும்ப இலக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
**இரகுராஜா**
அவர்களுக்கும்

எமது புதல்வி
திருநிறை செல்வி
**சிவகௌரி**
அவர்களுக்கும்

திருவருள் துணையுடன் வெள்ளவத்தை மயூராபதி ஸ்ரீபத்திரகாளி அம்மன் தேவஸ்தான சுப்பம்மாள் கல்யாண மண்டபத்தில் திருமணம் நடைபெறுகின்றது.

இவ்வைபவத்தினை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

Dr. S. சதாசிவம்
பிரதான வீதி, சித்தன்கேணி.

(83713)

## உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் தை மாதம் 22 ஆம் நாள் இன்று (04 - 02 - 2001) ஞாயிற்றுக்கிழமை காலை 8.15 மணி தொடக்கம் 9 மணிவரையுள்ள சுக்கில நட்சத்திர ஏகவித்தியமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்

எமது திருநிறை செல்வன்
**கிருபாகரன்**
அவர்களுக்கும்

எமது திருநிறை செல்வி
**அனிதா**
அவர்களுக்கும்

எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்மன் துணை கொண்டு சென்னை 42, நாகேந்திரா நகர், இல. 14, ஜெயம் மண்டபத்தில் திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை வாழ்த்தும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சுன்னாகம் இல்லத்தில் இன்று (04 - 02 - 2001) ஞாயிற்றுக்கிழமை மதியம் 11 மணிக்கு நடைபெறும் வரவேற்பு உபசாரத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

திரு. கிஸ்ணானந்தன்
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

திருமதி அருளம்பலம்
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்

(இரு வீட்டார் அழைப்பு) (83641)

## திருமண வாழ்த்து

இன்று [04- 02- 2001] ஞாயிற்றுக்கிழமை இல்லற வாழ்வில் இணையும்

சிரஞ்சீவி கணேசலிங்க ஐயா,
சௌபாக்கியவதி கிரிஜா
அவர்களை

பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல தீர்த்தாங்குள பிள்ளையாரை வேண்டுகிறோம்.

திருமதி
இ. பாலசுப்பிரமணிய ஐயா,
இயக்குநர்,
ஆங்கிலக் கல்லூரி,
அச்சுவேலி.

தீர்த்தாங் குளம்,
பத்தமேனி,
அச்சுவேலி.

[83720]

# தென்மராட்சி அபிவிருத்திப் பணிகளுக்குரிய கடந்த வருட நிதியை வங்கி வைப்பிலிட வேண்டும்

## யாழ்.செயலகக் கூட்டத்தில் வல்வை பிரதேச சபைத் தலைவர்

யாழ்ப்பாணம்,பெப்.4

தென்மராட்சிப் பகுதியில் கடந்த வருடம் அபிவிருத்தி வேலைகளுக்கு என ஒதுக்கப்பட்ட நிதியைத் திருப்பி அனுப்பாமல் வங்கியில் வைப்பிலிட வேண்டும்.

இவ்வாறு வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவரும், ரெலோ முக்கியஸ்தருமான எம்.கே.சிவாஜிலிங்கம் யாழ்.செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் வலியுறுத்தினார்.

யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற திணைக்களத் தலைவர்களுக்கான கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்திப் பேசினார்.

அவர் அங்கு உரையாற்றும் போது மேலும் கூறியதாவது:-

தென்மராட்சி அபிவிருத்திக்கு கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட நிதி அங்கு இடம்பெற்றுள்ள அனர்த்தங்கள் காரணமாகப் பயன்படுத்தமுடியாத நிலையேற்பட்டது.

இந்த நிதி திருப்பி அனுப்பப்படாது வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு அபிவிருத்தி வேலைகள் செய்யும் நிலை ஏற்பட்டதும் பயன்படுத்தப்பட வேண்டும். தென்மராட்சிப் பகுதியில் 90வீதமான கட்டடங்கள், வீடுகள் போன்றன அழிந்துபோயுள்ளன. இந்த அழிவுகளை ஈடுசெய்யும் வகையில் நிதி ஒதுக்கீடுகள் கிடைக்குமா என்பது கேள்விக்குறியே.

உள்ளூராட்சி சபைகளுக்கு இடையில் தென்னிலங்கையில் போட்டிகள் வைக்கப்பட்டு சபை நடவடிக்கைகளுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கப்படுகின்றன. ஆனால் வடபகுதியிலுள்ள சபைகள் புறக்கணிக்கப்படுகின்றன. மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுகின்றன.

இவ்வாறான நிலைமைகள் தொடர்ந்தும் தமிழீழத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நாம் எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

மாகாணசபையாக இருந்தால் என்ன? மத்திய அரசாங்கமாக இருந்தால் என்ன? எல்லாவற்றினாலும் நாம் புறக்கணிக்கப்படுகின்றோம்.

இருட்டுக்குள் கறுத்த பூனைகளைத் தேடும் நிலையிலே எமது சபைகள் இருக்கின்றன.

வல்வெட்டித்துறை நகரசபைக்கு உட்பட்ட பகுதியில் 90 வீதமான கட்டடங்கள் அழிந்துள்ளன. பத்துக் கோடி ரூபாவுக்கு மேல் எமக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் நிதி ஒதுக்கீடுகள் செய்யும் போது ஒரு வருடத்துக்கு 2 மில்லியன், 3 மில்லியன் என்று மட்டுமே ஒதுக்குகிறார்கள்.

### புனரமைப்புப் பணிகளை நிறைவேற்ற 50 வருடங்களாகும்

இவ்வாறு குறைந்த தொகை நிதி ஒதுக்கப்படுவதனால் புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு 50 வருடங்கள் செல்லும்

தென்பகுதியிலுள்ள ஒரு திட்டத்துக்கு ஒதுக்கப்படும் நிதியே இங்குள்ள சபைகளுக்கும் ஒதுக்கப்படுகிறது. மத்திய அரசாங்கம், மாகாண சபை போன்றவற்றின் உதவிகளில் நாம் புறக்கணிக்கப்படும் அதே சமயம் இங்குள்ள அரசசார்பற்ற நிறுவனங்களும் எமக்கு உதவிகள் வழங்குவதாக இல்லை.

இந்த நிறுவனங்கள் மேற்குலக நாடுகளில் உள்ளது போன்ற ஆடம்பர சுகபோக வாழ்வினையே நடத்துகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருக்கு நாம் எழுதும் கடிதங்களுக்கு பதில் கிடைப்பதில்லை. மாகாண சபை எம்மைத் திரும்பிப் பார்ப்பது இல்லை.

### இராணுவம் தடை

அண்மையில் 30 லட்சம் ரூபா செலவில் வல்வெட்டித்துறை நவீன சந்தை புனரமைப்புச் செய்யப்பட்ட போதும் அதனைப் பயன்படுத்துவதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள மின்சார சபை அதிகாரிகள் இராணுவ முகாம்களுக்கு சட்ட விரோதமாக மின்சாரம் வழங்கியுள்ளன. ஆனால் வைத்தியசாலைகளுக்கோ மற்றும் பொது இடங்களுக்கோ மின்சாரம் வழங்கப் பின்னடிக்கிறார்கள்.

தெரு விளக்குகள் கூட மின்சார சபையினால் போடப்படுவதில்லை. ஜனாதிபதி நிதியில் இருந்து தெரு விளக்குகளுக்கு மின்சாரம் வழங்க முடியும்.

யாழ்ப்பாணத்தில் மின்சாரசபையினர் மக்களைத் தொடர்ந்து சுரண்டிக் கொண்டே இருக்கிறார்கள். தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து ஏனைய இடங்களில் கடமையாற்றும் ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

யாழ்ப்பணத்தில் உள்ள சுகாதாரத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு விஜயம் செய்ய வேண்டும். பணிப்பாளரை நேரடியாகச் சந்திப்பதற்கு அனுமதி கிடைப்பது மிகக் கஷ்டமாக இருக்கிறது.

பருத்தித்துறை கரையோரப் பகுதிகளில் கடல் அரிப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

### வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் பேச்சு

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் என.திரிலோகநாதன் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:-

மின்சாரசபையைப் பொறுத்தவரையில் மின்சார விநியோகத்தின் போது பாரபட்சம் காட்டப்படுகின்றது. மாணவர்கள் படிக்கின்ற நேரங்களில் மின்வெட்டு அமுல் செய்யப்படுகிறது. ஊர்காவற்றுறையில் இருக்கும் படையினரின் முகாமுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளபோதும் அங்குள்ள வைத்தியசாலைக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

காரைநகரில் கடமையாற்றுகின்ற பாடசாலை அதிபர்கள் பாடசாலைகளுக்குப் பிந்தி வந்து முந்திச் செல்கின்றார்கள் என்று கூறினார்.

### சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் பேச்சு

சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா உரையாற்றிய போது கூறியதாவது:-

தென்மராட்சிப் பகுதியிலுள்ள மூன்று உள்ளூராட்சி சபைகளுக்கென கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட 90 லட்சம் ரூபா வெட்டப்பட்டுவிட்டது.

237 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட தென்மராட்சி பிரதேசம் இன்று சுடுகாடாகக் காட்சியளிக்கின்றது.

பிரதேச சபைத் தலைவர்களாக இருக்கின்ற நாங்கள் எங்கள் ஆதரவாளர்கள் கொழும்பு செல்வதற்கான ஒரு கப்பல் பயணச் சீட்டைக் கூடப் பெறமுடியாத நிலையிலுள்ளோம் என்றும் -

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவடைந்த பின்னர் முதன்முதலாக பிரதேச சபைத் தலைவராக நானே துணிந்து நின்று பதவி ஏற்றுக் கொண்டேன். ஏனையோர் பிஸ்டல் குழுவுக்கு அஞ்சி அப்போது பதவி ஏற்கப் பின்னடித்தார்கள் என்று கூறினார்.

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் சிறீரங்கேஸ்வரன் உரையாற்றும் போது உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற நாம் அரசுக்குச் சில அழுத்தங்களைக் கொடுப்பதற்காகவே பதவி ஏற்பதனைத் தாமதித்தோம். எமது கோரிக்கைகள் செவிமடுக்கப்பட்ட பின்னர் பதவிகளை ஏற்றுக்கொண்டோம் என்று கூறினார்.

நெடுந்தீவு பிரதேச சபையின் தலைவர் புலவர் ஏ.அரியநாயகம் உரையாற்றும் போது நெடுந்தீவு கடற்பகுதியில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். (க-5)

# சென்னையில் கள்ள நோட்டுகளுடன் இரு இலங்கை முஸ்லிம்கள் கைது!

சென்னை,பெப்.4

சென்னை பிளவர் பஜாரில் வைத்து முஸ்லிம்களான இரண்டு இலங்கை இளைஞர்களை தமிழகப் பொலிஸார் கடந்த புதனன்று கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் இந்திய நாணயத்தில் 50 ஆயிரம் ரூபா கள்ள நோட்டுகள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

பாறு எனப்படும் மொகமட் சக்காரியா மற்றும் கியாஸ் எனப்படும் செய்நுதீன் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் தங்கியிருந்த அறையில் இருந்து மொகமட் அலவி என்ற இலங்கையரின் கடவுச்சீட்டையும் பொலீஸார் மீட்டதாக அறிவிக்கப்பட்டது. (ஐ-20)

# கொழும்புத்துறை, பாஷையூர் பாடசாலைகளைத் திறக்க ஏற்பாடு

அரியாலை,பெப்.4

கொழும்புத்துறை மேற்கு இந்து மகாவித்தியாலயம், கொழும்புத்துறை சென்.ஜோசப் மகா வித்தியாலயம், பாஷையூர் சென்.அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது இந்தப் பாடசாலைகளைத் திறப்பதற்கு முன்னேற்பாடாக அவை துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை-

இந்தப் பாடசாலைகளில் இருந்த தளபாடங்கள் பெருமளவில் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-17)

## அரியாலைப் பகுதியில்

# ப.நோ.கூ.ச. கிளைகளை மீண்டும் திறக்குமாறு பணிப்பு

கோண்டாவில்,பெப்.4

அரியாலைப் பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து பூட்டப்பட்ட யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கக் கிளைகளைத் திறக்கும்படி பிரதேச செயலாளர் பணித்துள்ளார்.

அரியாலைக் கிராம அலுவலர் பிரிவில் கடந்த மாதம் முதல் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேறி வருகின்றனர்.

எனினும் அங்கு தனியார் கடைகள் ஏதும் இதுவரை இயங்கத் தொடங்கவில்லை. இத்தகைய நிலைமையில் அங்கு குடியமர்ந்தோர் பொருள்களைப் பெற வேறு இடங்களைத் தேடிச் செல்ல வேண்டி உள்ளது.

கிராம அலுவலர்கள் மக்களின் இக்குறைபாட்டை சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்தே பிரதேச செயலர் அங்கு ப.நோ.கூ. சங்கக் கிளைகளைத் திறக்குமாறு கேட்டுள்ளார். (க-86)

# விபத்தில் காயம்

யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திற்குச் சென்ற பருத்தித்துறை நகர சபை உப தலைவரும் நகர சபை ஊழியரும் மோட்டார்சைக்கிள் விபத்தில் சிக்கி படுகாயமடைந்தனர்.

மந்திகையில் வெள்ளிக்கிழமை பகல் 2 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

நகரசபை உப தலைவர் நாகலிங்கம் மணிவண்ணன் (வயது 48) நகர சபை ஊழியர் சதாநந்தன் ஸ்ரீலேலாநந்தன் (வயது40) ஆகிய இருவரும் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளுக்குக் குறுக்கே திடீரென நாய் பாய்ந்ததாலேயே விபத்து நேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117-173-109)

# மணிக்கோபுர கும்பாபிஷேகம்

திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மணிகோபுரத்தின் கும்பாபிஷேகமும் மணவாளக் கோல சங்காபிஷேகமும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9.33 தொடக்கம் 10.36 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் இடம்பெறும். மாலை 3மணியளவில் திருவீதி உலாவும் இடம்பெறும்.

இன்று ஞாயிறு பகல் 12 மணிக்கு கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகின்றன. (ஒ)

இணுவில் மஞ்சத்தடி பதியுறையும்

அருள்மிகு அரசோலை விநாயகர் கோயில்

புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

காலம்: இன்று (04-02-2001) ஞாயிறு முற்பகல் 9.36 - 10.35 மணி

பிரதமகுரு:

பிரம்மஸ்ரீ அ.நா.சோமாஸ்கந்த சிவாச்சார்யார் (M.Phil.)

(சிரேஷ்ட விரிவுரையாளர், இசைத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

தேவஸ்தானக் குருக்கள்:

பிரம்மஸ்ரீ.ம.கிருஷ்ணமூர்த்தி ஐயர்.

மங்கள இசை:

- இ.சண்முகராசா குழுவினர் (தேவஸ்தானம்)
- இ.சுந்தரமூர்த்தி குழுவினர் (இணுவில்)
- வி.கே.கானமூர்த்தி குழுவினர் (கோண்டாவில்)
- க.உதயநாதன் குழுவினர் (இணுவில்)
- கோவிந்த சாமிபுத்திரர் (இணுவில்)
- க.நித்தியானந்தன் (தவில்) (இணுவில்)

அருள் உரை: அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்.

பிற்பகல் நிகழ்ச்சி

பி.ப.3மணி வயலின் இசை

இசைஞானதிலகம் உ.இராதாகிருஷ்ணரின் மாணவிகள்

- செல்வி தி.அஜிதா
- செல்வி நா.பிரியதர்சினி
- செல்வி பா.ஜெயகௌரி
- செல்வி க.தர்மிகா
- செல்வி தே.சுஜாதா

செல்வன் கே.அனந்தகோபன் - மிருதங்கம்

பி.ப. 4மணி இசைக்கச்சேரி

சங்கீதபூஷணம் எஸ்.பத்மலிங்கம் - பாட்டு
இசைஞானதிலகம் உ.இராதாகிருஷ்ணன் - வயலின்
சங்கீத ரத்தினம் எம்.சிதம்பரநாதன் - மிருதங்கம்
செல்வன் கே.அனந்தகோபன் - கெஞ்சிரா
திரு.எஸ்.ராஜி - முகர்சிங்

பி.ப. 6மணி வசந்த மண்டப பூசை, பூசையைத் தொடர்ந்து சுவாமி திருவீதி உலா இடம்பெறும்.

மஞ்சத்தடி, இணுவில். (C/15140) பரிபாலன சபையினரும் உபயகாரரும்.

உ
சிவமயம்

யாழ்.போதனா வைத்தியசாலை

கண் சத்திரசிகிச்சைக் கூடத் திறப்பு விழா

அன்புடையீர்,
வணக்கம்

இலண்டன் சிவயோகம் அறக்கட்டளையினரின் பேருதவியால் அமைக்கப்பட்ட "நவீன கண் சத்திரசிகிச்சைக் கூடத் திறப்பு விழா" நடைபெற இறையருள் கைகூடியுள்ளது. இவ்வைபவத்தில் தாங்கள் யாபேரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

காலம்: நாளை (05-02-2001) திங்கட்கிழமை பிற்பகல் 12.05 மணி

தலைவர்: Dr.செல்வி நவமலர் கனகரத்தினம் அவர்கள் (பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை.)

கண் சத்திரசிகிச்சைக் கூடத்தைத் திறந்து வைப்பவர்,

பிரதமவிருந்தினர்:

அன்னை, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி,J.P. அவர்கள்

(தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

சிறப்பு விருந்தினர்:

கண் வைத்திய நிபுணர்
Dr.ச.குகதாசன் அவர்கள்

நல்லூர், யாழ்ப்பாணம். (C/15141) ஆறு.திருமுருகன்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் ப
# "செந்தமிழ்த் திலகம்" பேராசிரியர் அ.சண்மு

## நன்று வாழ்க

பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் சொல்லும் செயலும் ஒருங்கே இணைந்த வாழ்வைக் கொண்டவர். எளிமையான தோற்றம், இனிமையான



பேச்சு கம்பீரமான நடை, சீரான உடை, தமிழனாக வாழவேண்டும் என்ற பேரவா! தமிழ்த் தேசிய உடையோடு நடமாடும் பேராசிரியர் நடமாடும் பல்கலைக்கழகமாக வாழ்ந்து கொண்டிருப்பது எம் மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் பெருமை தருவனவாக உள்ளன. திரு சண்முகதாஸ் அவர்களை கௌரவித்து மணிவிழாக் காணும் குழுவினரை பாராட்டுகிறோம். திரு.சண்முகதாஸ் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து பல பணிகளை ஆற்ற இறைவனை வேண்டுகிறோம்.

வாழ்க வளமுடன்!

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்,**
நல்லை ஆதீன முதல்வர்

## சிறந்த வழிகாட்டி

பேராசிரியர் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறந்த விரிவுரையாளராகவும், ஆய்வாளராகவும், பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டி ஆலோசகராகவும் விளங்கி வருகின்றார். தனது பேச்சாற்றலினால் யாவரையும் கவர வல்ல பேராசிரியர் கல்வி நிர்வாகத் துறையின் துறைத் தலைவராகவும், சிரேஷ்ட மாணவ ஆலோசகராகவும், விடுதிக் காப்பாளராகவும், கலைப் பீடாதிபதியாகவும் பணி புரிந்து தற்போது பட்டப்பின் படிப்புப் பீடாதிபதியாகவும் செயற்பட்டு வருகிறார்.



அன்பாகவும் பண்பாகவும் பழகும் பேராசிரியர் இன்னும் பல காலம் சீருஞ் சிறப்புமாக வாழவேண்டும். அவரின் சேவை எமது மக்களுக்குக் கிட்டவேண்டும் என இறைவனை வேண்டி அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்தையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். பேராசிரியருக்கு மணிவிழாவை ஒழுங்கமைத்த மணிவிழா அமைப்பினருக்கு எனது நன்றிகள்.

**பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை,**
துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## தனி முத்திரை பதித்தவர்

பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் தமிழ்கூறு நல்லுலகத்திற்கு நன்கு அறிமுகமான பேரறிஞர். தமிழ்மொழி மீதும், தமிழ் கூறு நல்லுலகத்தின் மீதும் அளவுகடந்த பற்றுக் கொண்டவர்.



பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் நன் மாணாக்கரான இவர், அவர் வழி நின்று தனக்கென ஒரு மாணவப் பரம்பரையை உருவாக்கிச் சிறப்புப் பெற்றுள்ளார். இலங்கையின் பல பாகங்களிலும் தனது பேச்சால், எழுத்தால், சேவையால் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்று முத்திரை பதித்துள்ளார். இலங்கையில் மாத்திரமல்ல இந்தியா, இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, ஜப்பான் எனப் பல்வேறு நாடுகளிலும் தனது தனிச் சிறப்பைக் காட்டிப் பல தமிழியல் ஆய்வரங்குகளில் கலந்து சிறப்பித்துள்ளார். தனது சிறந்த அறிவியல் ஞானத்தால் பல பயனுள்ள நூல்களை ஆக்கியுள்ளார்.

மனித நேயப்பண்புடைய பேராசிரியர் மாணவர்களுடனும், மற்றவர்களுடனும் மிக அன்பாகப் பழகும் பாங்குடையவர். அவரது மனிதநேயப் பண்பை மேலும் விளக்குவதாக அமைவதுதான், சைவ வித்தியாவிருத்திச் சங்கத்துடன் அவர் தன்னையும் தனது மனைவியார் திருமதி ச.மனோன்மணி அவர்களையும் இணைத்து கடந்த பல வருடங்களாகச் சைவ அனாதைச் சிறுவர்களுக்கு ஆற்றிவரும் தொண்டாகும்.

இத்தகைய பெருமை வாய்ந்த பேராசிரியருக்கு இவ்வாண்டு சிறப்பாக மணிவிழா நடைபெறுகின்றது. அவருடன் சேர்ந்து தமிழ்த்தொண்டாற்றியவர்களும், அவருடைய மாணவர்களும் இணைந்து மணிவிழாவை ஏற்பாடு செய்துள்ளோம். இவ்விழாவைப் பயனுள்ள முறையில் கொண்டாட பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் மணிவிழா அமைப்பினராகிய நாம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இதற்கான உதவிகளை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். விழா இனிது நிறைவேற உதவிய இறையருளைத் துதிப்போம்.

**திருநாவுக்கரசு கமலநாதன்,**
தலைவர்,
பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் மணிவிழா அமைப்பு
(பீடாதிபதி - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.)



பேராசிரியர் அ.சண்முகதாஸ் மணிவிழா அமைப்பின் உறுப்பினர்.

## அருள் செழித்து வாழி வாழி!



**வெண்பா**

அன்பே வடிவம் அருளே நிறை நெஞ்சம்
இன்பத் தருமமே எண்ணங்கள் – பொன் பெருகி
சொற்பண்பு மாண்பமைந்த சுந்தரனே சண்முகதாஸ்
கற்பகம் போல் வாழ்க களித்து.

**விருத்தம்**

அறிவு தரும் யாழ் . நகர்ப்பல் கலாமன்றத்தில்
ஆராய்ந்து தமிழ்வளர்க்கும் பொதிகை வெற்புக்
குறுமுனி போல் செயலாற்றும் குரிசிலே நற்
குணச் சைவச் சண்முகதாஸ் என்னும் செல்வா
குறைவுடையார் நிலைகண்டு சேவை செய்யும்
குளிர் தருவே, தெய்வீகக் கொடைக் கரத்து
நிறைமனைவி மக்களினால் நல்வாழ்வுற்றாய்
நிலாச்சடையன் அருள் செழித்து வாழி வாழி.

**அருட்கவி. சீ. விநாசித்தம்பிப்புலவர்**

## பல்துறை அறிஞர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவரும் பட்டப்பின் படிப்புத் துறையின் தலைவருமான பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களுக்கு மணிவிழா நடைபெறப்போகின்ற செய்தி யாவர் மனதிலும் பெரியதொரு உவகையைத் தந்துள்ளது.



மக்கள் ஆசான் சண்முகதாஸ் அவர்கள் சைவ சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடும் புலமையும் உடையவர். அவருடைய மனைவி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் ஜப்பான் மொழி மூலம் தமிழைக் கற்பிக்கும் பெருமைக்குரியவர். கணவனும் மனைவியும் இணைந்து தமிழ்ப்பணி செய்கின்ற பெருமைக் குரியவர்கள்.

அத்தகைய பெருமகனுக்கு மணிவிழா எடுப்பது சாலச் சிறந்தது. இத்தகு மணிவிழாவை எடுக்கின்ற மணிவிழா அமைப்பினருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர் பல்லாண்டு காலம் தமிழ்ப் பணி செய்து தமிழ் மக்களின் நன்மைக்காக செயற்பட தமிழ்த் தாய் அவருக்கு நீண்ட ஆயுளையும் நல்லா ரோக்கியத்தையும் வழங்கவேண்டும் என்று வேண்டி அவரது தமிழ்ப் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

**க.சண்முகநாதன்,**
அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்.

## தமிழ்மொழியின் காவலர்

தமிழ்மொழி - தமிழ்ப்பண்பாடு - தமிழ் நாகரிகம் - உலகில் மூத்தது, முதன்மையானது அதனை தமிழினம் அவசியமாகவும் அவசரமாகவும் கற்றறிய வேண்டிய பாரிய பொறுப்பு இன்று உண்டு. எம் மண்ணில் எமது மொழியையும்



இலக்கியத்தையும், கலையையும் பண்பாட்டையும் பேணுகின்ற, பாதுகாத்து வருகின்ற தன்மை எம்மவரிடையே பெரிதும் விலகிச் செல்வதை காணமுடிகிறது. எம் மொழியில், பண்பாட்டில் நாம் வைத்திருக்கும் உரிமையான பற்றும் பாசமும்தான் தேசியப் பற்றுணர்வாக பரிணாமம் பெறுகிறது.

இன்று எம் தாய் நிலத்தைப் பிரியாமல் தேமதுரத் தமிழோங்க எம்மண்ணிற்கும், எம் இனத்திற்கும், எம் மொழிக்கும் உலகளாவிய ரீதியில் பெருமை தேடித் தந்து கொண்டிருப்பவர் "செந்தமிழ்த்திலகம்" பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள். அவரது சீரிய தமிழ்ப்பணிகளைக் கௌரவிக்கும் முகமாக எமது 'மணிவிழா அமைப்பு' மணிவிழா எடுத்து மகிழ்கின்றது. பேராசிரியருக்கு எடுக்கின்ற மணிவிழா தமிழ்மொழிக்கு எடுக்கின்ற மணி விழாவாகும். அவர் தகுதியான தமிழ்ப்புலமை மிக்கவர் தமிழுக்காகவும் சைவமேம்பாட்டிற்காகவும் தன் வாழ்நாளெல்லாம் எந்த இடர்வந்தாலும் எம்மண்ணைப்பிரியாது உழைப்பவர்.

பேரறிஞர் சண்முகதாஸ் அவர்கள் தமக்கென ஒரு பேராற்றலை கொண்டு விளங்குபவராகவும் எத்துறையை ஒப்பிட்டு ஆராயினும் அத்துறையில் ஆய்வு ரீதியாக, தர்க்க ரீதியாக, யதார்த்தரீதியாகச் சிந்தித்துச் செயலாற்றும் தனித்திறமை கொண்டவர்.

அவர்கள் எம் தாய் நிலத்தின் தமிழ்மொழியின் காவலன். பேராசிரியருக்கு துணையாக அவரது துணைவியார் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் இணைந்து அளப்பரிய பணிகளை ஆற்றிவருகின்றார்கள். இவர்களை வணங்குகிறோம், வாழ்த்துகிறோம்.

தமிழன்னை தன் மகனுக்கு எடுக்கும் விழாக்கண்டு பூரிக்கிறாள். திருநெல்வேலி யா/முத்துத்தம்பி வித்தியாலயத்தில் இன்று மாலை 2.00 மணிக்கு கோலாகலமாக இவ்விழா நடைபெறுகிறது. விழாவில் பேராசிரியருக்கு "செந்தமிழ்த்திலகம்" என்னும் கௌரவ உயர் விருதினை எமது அமைப்பு வழங்கிப் பெருமைப்படுகின்றது. அத்துடன் "சண்முகதரிசனம்" என்னும் இரண்டு நூல்களை வெளியிட்டு மகிழ்கின்றது.

இந்த விழாவில் கலந்துகொள்ள அனைத்துத் தமிழ் நெஞ்சங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"இன்னுயிர் நீப்பினும் நந்தமிழ் காப்போம்"

**மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்,**
செயலாளர்,
பேராசிரியர் அ.சண்முகதாஸ் மணிவிழா அமைப்பு,
யாழ்ப்பாணம்.

(C/15148)

## சமூக மேம்பாட்டுக்கு

பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களை ஒரு கு
சிரியரின் இன்றைய நிலைக்கு அவருடைய குணநல



எவரும் ஏற்றுக்கொள்வார்கள்.
மொரு சிறப்பான பண்பு, அவர
தனது இளமைக் காலத்தில்
கோரப்பிடியில் சிக்கித்தவித்தன
இக்கல்விமான் பிரச்சினைகள்
வாழ்வது நமக்குப்பெருமையள
வாழ்ந்து யாழ்ப்பாணத்தின் கல்
அரும் பணியாற்ற இறைவன் அ

**பேராயர் ச**
தென்



## சுய விவரக்


| | | |
|---|---|---|
| பிறப்பு | : | 1940.01.02 திருகோணமலை |
| பள்ளிப்படிப்பு | : | தி அர்ச்.பிரான்சிஸ் சவேரியார் |
| | | மத்திய மகாவித்தியாலயம், |
| | | சிவானந்த வித்தியாலயம், ம |
| பல்கலைப்படிப்பு | : | இலங்கைப் பல்கலைக்கழகம் |
| | | எடின்பரோப் பல்கலைக்கழக |
| திருமணம் | : | 1965.08.29 கண்டியில் |
| மனைவி | : | கலாநிதி மனோன்மணி, B.A.( |
| பிள்ளைகள் | : | கலைச்செல்வி குகசிறீ, திரு |
| பேரப்பிள்ளைகள் | : | சேந்தினி, இளநிலா, அபிதே |
| பதவிகள் | : | யாழ்ப்பாணப் பல்கலைக்கழக |
| | | - மொழி - பண்பாட்டியல்துறை, |
| | | - கலைப்பீடாதிபதி, பட்டப்பின் |
| | | - உலகத்திராவிட மொழியிய |
| | | - மலாயா பல்கலைக்கழக இ |
| | | - உலகத் தமிழாராய்ச்சி நி |
| | | - உலக ஆசியக் கற்கை நெறி |
| | | - சைவ வித்தியா விருத்திச் |
| | | - வட இலங்கை ஆயுள்வேத |
| | | - யாழ்.நாட்டார் வழக்கியற் |
| | | - இந்தியா, ஜப்பான், ஜேர்மனி, |
| | | னேசியா ஆகிய நாடுகளிலே ந |
| | | மாநாடுகள் கருத்தரங்குகளி |
| | | லாந்து, நைஜீரியா, சிங்கப்பூ |
| | | ஆகிய இடங்களுக்குக் கல்வி |
| | | 11க்கு மேற்பட்ட நூல்கள் |
| | | துணைவியார் மனோன்மணி |
| | | மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைக |
| | | யும் எழுதியுள்ளார். |

# பட்டப்படிப்புகள் ஆய்வுபீடப் பீடாதிபதி
# ...முகதாஸ் அவர்களின் மணிவிழாச் சிறப்பிதழ்

## ...டுக்குத் துணைநிற்க!

...ளை ஒரு குணக்குன்றாகவே கருதுகின்றேன். பேரா
...டைய குணநலமே முக்கியமான காரணம் என்பதனை
...கொள்வார்கள். பேராசிரியர் அவர்களிடமிருந்த இன்னு
...பண்பு, அவருடைய பேச்சில் காணப்படும் உண்மை.
...க் காலத்தில் தான்பட்ட கஷ்டத்தையும் வறுமையின்
...க்கித்தவித்ததையும் அவர் என்றுமே மறைத்ததில்லை.
...பிரச்சினைகள் நிறைந்த யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து
...குப்பெருமையளிக்கின்ற விடயம். அவர் நீடூளி காலம்
...ாணத்தின் கல்வி வளர்ச்சிக்கும் சமுதாய மேம்பாட்டுக்கும்
... இறைவன் அருள்பாலிக்க வேண்டும்.

**பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்**
தென்னிந்தியத் திருச்சபை.



## ...ரக் கோவை

...கோணமலை

...ஸ் சவேரியார் றோ.க.த.க.பாடசாலை, திருகோணமலை.
...தியாலயம், ...தாறுமுலை, செங்கலடி, மட்டக்களப்பு.
...தியாலயம், மட்டக்களப்பு.

...கலைக்கழகம், பேராதனை.
...கலைக்கழகம், ஸ்கொட்லாண்ட்.

...டியில்

...ன்மணி, B.A.(HONS.), M.A., Ph.D.

...தகசிறீ, திருநங்கை ஞானசபேசன், செந்தூரன்

...லோ, அபிதேவ், தியானா.

...கலைக்கழகத்தில்

...ட்டியல்துறை, தமிழ்த்துறை, இசைத்துறைத் தலைவர்.
..., பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி, பதில்துணைவேந்தர்.
...ட மொழியியற் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்.
...லைக்கழக இந்தியவியல்த்துறைத் தேர்வு, பாடவிதான
ஆலோசகர்.

...ராய்ச்சி நிறுவனத்தின் ஆயுட்கால உறுப்பினர்.
...கற்கை நெறிகள் நிறுவனத்தின் ஆயுட்கால உறுப்பினர்.

... விருத்திச் சங்கத் தலைவர்.
... ஆயுள்வேத ...த்துவக் கல்லூரிச்சபைத் தலைவர்.
... வழக்கியற் கழகத் தலைவர்.
...ன், ஜேர்மனி, பிரான்சு, மொரிசியஸ், மலேசியா, இந்தோ
...நாடுகளிலே நடைபெற்ற 20 க்கும் மேலான உலக
...தரங்குகளிலே பங்குபற்றியமை. இவற்றைவிட இங்கி
...ா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, கீனியா, தாய்லாந்து
...க்குக் கல்விசார் பயணங்கள் செய்துள்ளார்.
... நூல்கள் எழுதியுள்ளார். இவற்றுள் 3 நூல்கள்
...னொன்மணியுடன் இணைந்து எழுதப்பட்டன. 40க்கு
...கட்டுரைகளையும் 100க்கு மேற்பட்ட கட்டுரைகளை
...ர்.

## தமிழ்த்துறை எழுச்சியாளர்

கல்வி நிலையங்களில் உயர்பீடமாக விளங்குவது பல்கலைக்கழகமாகும். இதனுடைய உயர்ச்சியிலும் வளர்ச்சியிலும் பங்கு கொண்டு பணியாற்றியவர்கள்



பலர். துணைவேந்தர் வித்தியானந்தன், துணைவேந்தர் துரைராஜா, துணைவேந்தர் குணரத்தினம், துணை வேந்தர் பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்க வர்கள். அத்துடன் பல்கலைக்கழக தமிழ்த்துறை பற்றிய எழுச்சியிலே முக்கிய பங்கு பேராசிரியர் அ. சண்முக தாஸ் அவர்களுக்கு உண்டு என்று கூறுவதில் மிகை யொன்றுமில்லை. அறிவு மேம்பாடும் ஆய்வு மேம்பாடும் பக்தி மேம்பாடும் மிக்கவர் இப்பெரியார். யாழ். பல்கலைக் கழகத்தில் யான் கண்ட ஒரு மாமனிதர் என்றே பேரா சியர் சண்முகதாஸ் அவர்களைக் குறிப்பிடுவேன். பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் மணி விழாவோடு பவள விழா, முத்து விழா, நூற்றாண்டு விழா என்பவற்றையும் கண்டு பூரண பொலிவுடன் வாழ வேண்டும் என்று திருவரு ளைப் பிரார்த்திக்கிறேன்.

**கலாநிதி, சிவத்தமிழ்ச் செல்வி**
**தங்கம்மா அப்பாக்குட்டி,**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## கல்வி மேம்பாட்டின் வழிகாட்டி

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை தமிழ்த்துறை பேராசிரியராகவும் பல்கலைக் கழகப் பீடங்களில் அதியுயர் படிப்புப் பீடாதிபதியாகவும் உள்ளார். எங்கள் கல்விப்புல ஆசிரியர்கள், அதிபர்கள், அலுவலகர்களது வாண்மை, கல்வி ரீதியான மேம்பாட் டுக்கு அவர்கள் வழிகாட்டியாக உள்ளார்கள். இனிமை யும், எளிமையும், அன்பும், ஆத்மீகமும், இரக்க சிந்தை யும் தெய்வீகத் தொண்டும், பணிவும் கொண்ட பண்பா ளரே எங்கள் பேராசிரியர். தாய் தந்தையை இழந்து, வாழ வழியறியாது தவிக்கும் குழந்தைகளுக்கு திருநெல் வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் நிறை வாழ்வு



இல்லத்தை அமைத்து வழிநடத்தி வருகின்றார்கள். அவர்கள் பணி வளர வாழ்த்துகின்றேன்.

**- கலாநிதி.ச.நா.தணிகாசலம்பிள்ளை,**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

## விழிப்புச் செய்தி

ஈழத்தமிழர்களின் வரலாற்றில் தமிழ் மொழியியலுக்கும், தமிழ் மண்ணுக்கும் பணி செய்து முதன்மை நிலையில் உள்ளவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ்



அவர்கள். எம் மண்ணின் மைந்தனான அவருக்கு இன்று மணிவிழா.

மணி விழா உறுப்பினர்கள் பேராசிரியரின் மாண வர்கள். ஈழத்தமிழ் மண் எங்கும் அவர் பதித்த பாதப் பதிவினூடு சென்று சேவையாற்றிய தமிழ்ப்பற்றாளர்கள். அமைப்பினரது கூட்டுணர்வு மிகையான பொறுப்புணர்ச்சி பலருக்கு எழுச்சியை ஏற்படுத்தியது. இதை உணர்ந்து திருப்தியடைந்தோம்.

இன்றைய மணிவிழா நன்னாளில் 'சண்முகதரிசனம்' என்ற தலைப்பிலான இரு மலர்கள் வெளியிடப்படுகின்றன. ஒன்று பேராசிரியர் அவர்களைச் சமூகத்தவர்கள் பார்க்கும் பல்பரிமாண உயர் பார்வை. மற்றையது க.பொ.த உயர்தர, பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு உதவக் கூடிய தமிழியல் பல்துறைப் பாடங்கள் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய மலர். இவற்றினூடு தமிழின கல்வி, கலையியல், பின் நவீனத்துவத் துறை விருத்திக்கான விழிப்பை ஏற்படுத்த முனைகின்றோம்.

எம்மினத்தினரிடையே சுயநலம் கூடி கோழைகள் பெருக வசதியாகவுள்ள கல்வி, அரசியல், சமூக, மத அமைப்புக்களை ஏற்றுக்கொண்டு, சமூகச்சீர்மை யும், தமிழின மேன்மையும், அபிவிருத்தியும் ஓங்குமென நாம் கனவு காண்பது அறியாமை. இதை இளந்தலைமுறையினரிடமிருந்து நீக்க ஆசிரியர்கள், பல் கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்வியாளர்களினாலேயே முடியும்.

இதற்கு மேற்குறிப்பிட்டோர் மனப்பாங்குகளால் ஆயுதபாணிகளாக வேண்டி யுள்ளது. இவ்வாயுதங்கள் தியாகம், அர்ப்பணிப்பு, அன்பு, தீர்மானங்களை மேற்கொள்ளும் வன்மை, கல்வியின் ஞானத்தை அடையும் அவா என்பவையாக இருக்கவேண்டும். வேதனைகள் கூடியும், அபிவிருத்தி குன்றியுமிருக்கும் எம்மின எழுச்சிக்குத் தியாகங்களையும் தேவையானால் காயங்களையும் ஏற்படுத்திக் கொள்ளத் தயாராகும் போதுதான் ஓர் உன்னதமான விழிப்புக் கொண்ட தமிழ்ச் சமூகத்தை உருவாக்கலாம்.

இந்த எழுச்சிப் பேரவா தமிழுக்காகத் தன்னையே அர்ப்பணித்த பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் மணிவிழாவை ஒட்டிய விழிப்புச் செய்தியாக எம் தேசத்திலிருந்து உலகெங்கும் பரவட்டும். பேராசிரியர் அவர்களின் அர்ப்பண சேவைக்கு நாம் செலுத்தும் காணிக்கை மேற்குறிப்பிட்ட செய்தியை உயிர்ப் பூட்டி எம்மையே அர்ப்பணித்து உரமூட்டுவதாக அமையட்டும்.

**பா.தனபாலன்,**
(பத்திராதிபர்)
உபபீடாதிபதி (கல்வி),
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



"செந்தமிழ்த் திலகம்" விருது



## செந்தமிழ்த் திலகமென பெயரணிந்து வாழ்க!

செந்தமிழ்த் திலகமென பெயரணிந்து வாழ்க
தேமதுரத் தமிழோங்க சீர்பெருக்கி வாழ்க
இந்த மண் அழகுபெற இங்கிருந்து வாழ்க
ஈழவரின் தமிழுக்கு தொண்டுசெய்து வாழ்க

**- மதுரகவி.காரை எம்.பி.அருளானந்தன்.**

## பேராசிரியர் சண்முகதாஸ் பற்றி....

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உயர் பட்ட ஆய்வுப் பீடாதிபதியா கப் பணிபுரியும் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் மொழியியல், தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் மற்றும் சமயம், பண்பாடு தொடர்பாக மிகவும் ஆழமான ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளார். இவரது ஆய்வுக் கட்டுரை கள் ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் ஜப்பானிலும் வெளிவரும் ஆய்வேடுகளில் வெளிவந்துள்ளன.

சர்வதேசக் கருத்தரங்குகள் பலவற்றில் பங்குகொண்ட பேராசிரியர் அவர்கள் 1997 இல் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆறாவது உலக சைவ மாநாட்டிலும், 2000இல் இந்தோனிசியாவின் பாலித் தீவில் நடைபெற்ற இரண்டாவது உலக இராமாயணப் பாரதக் கருத்தரங்கிலும் சிறப்பாக ஆய்வுக் கட்டுரை படித்த பெருமைக்குரியவர். பழகுவதற்கு மிகவும் இனியவராக விளங்கும் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களை நீடூழி வாழ்கவென வாழ்த்தி அவர்கள் மேன்மேலும் பணிகள் பல புரிவதற்கு இறையருள் கிடைக்க இறைஞ்சுகிறேன்.

**பேராசிரியர் டாக்டர் க.பாஸ்கரன்,**
இயக்குநர், தத்துவ மையம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

★ ★ ★ ★

ஜப்பான் - தமிழ் மொழி உறவு பற்றி பேரா. ஓனோ எழுதிய நூல் ஒன்றை மதிப்பிடும் கருத்தரங்கத்தில் தமிழக அறிஞர் பலரும் மலேய நாட்டு தமிழ் அறிஞர்கள் சிலரும் சென்ற ஆண்டு 10 நாள் ஜப்பான் நாட்டுத் தலைநகர் டோக்கியோவுக்குச் சென்றிருந்தோம் அதில் அவரும் அவர் துணைவியாரும் அந்த ஆய்வில் தொடர்பு கொண்டு பணியாற்றிய முறையிலேயே பங்கு கொண்டார்கள். ஜப்பானிய மொழிக்கு இணையான தமிழ் மொழி அமைப்புக் கூறுகளைச் சங்க இலக்கியங்களிலிருந்தும் பிற இலக்கியங்களிலிருந்தும் எடுத்துக்காட்டியது அவர்கள்தான். அந்தக் கருத்தரங்கில் பேரா. ஓனோ முதலில் ஜப்பானிய மொழிக்கூறு அதற்கு இணையான தமிழ் மொழிக் கூறு என்று தன்னுடைய கருத்தை முன் வைப்பார்கள். அதை மதிப்பிடவேண்டியது எங்கள் வேலை. அப்போது நாங்கள் இணையாகக் காட்டப்பட்ட சில தமிழ்க் கூறுகள் பற்றி மாற்றுக் கருத்துக் கூறும்போது அவர் ஏற்றுக்கொண்ட விதம் அல்லது தன்னுடைய கருத்தை வலியுறுத்திய விதம் அவருடைய அறிவுப்பண்பை நேரில் பார்க்க முடிந்தது. அவர் பற்றிய மதிப்பீடு இன்னும் பல மடங்கு கூடியது.

**டாக்டர் எஸ்.வி.சண்முகம்,**
முன்னாள் மொழியியல் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

**SPLENDOR HERO HONDA (BLACK), HONDA C.D-200 ROAD MASTER (Read),** விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 41, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். **T.P.2226.** (83688)

ஒலிம்பிக்ஸ் **Micros cope (Japan)** உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பாலா, இல.**17/1,** றெயில்வே வியு, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (83613)

பாலைத் தீராந்திகள், கைமரங்கள், கப்புகள், நிலைகள், சலாகைகள், வளைகள், முதிரைக் கதவுகள், பலகைகள், யன்னல்கள், பனங்கை மரங்கள் என்பன முழுவதும் மொத்தமாக உடன் விற்பனைக்குண்டு. பிரித்துக் கொடுபடமாட்டா. பார்வையிடும் இடம்: சுந்தரேஸ்வரக்குருக்கள், மந்திகை அம்மன் கோயில், புலோலி. விலை தீர்க்கும் இடம்:**S.**தம்பையா, 84, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர். (83705)

ஒரு மாத அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. கலப்பின நாய்க்குட்டிகளும் உண்டு. தொடர்பு: அ.நித்தியானந்தன், பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி, இணுவில். (83725)

யாழ்.-மானிப்பாய் வீதியில் 3ஆம் கட்டை, ஆனைக்கோட்டையில் 13 பரப்பு தென்னங்காணி (நல்ல வருமானமுடையது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.இராசரத்தினம், பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி, இணுவில் தெற்கு, சுன்னாகம். **(C/15139)**

நல்ல நிலையிலுள்ள **Px125 ELESTRAT-VESPA** ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல. 07, கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம். (83645)

தேக்கமரம் ஒன்று விற்பனைக்கு உண்டு. (காட்டுத தேக்கு 5 அடி சுற்றளவு) பார்வையிட சயன்ஸ் சென்ரர் முன்பாக கேணியடி, கொக்குவில் மேற்கு. தொடர்பு: ஸ்ரீ ஜீவா (ஸ்ரீ முருகன் அரிசி ஆலை வளவு), மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. (83635)

புத்தம் புதிய **PANASONIC PORTABLE STEREO CD SYSTEM, NATIONAL RXC 34 RALEIGH** ஆண்களுக்கான துவிச்சக்கரவண்டி, **HONDA PALFREY** மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- மு.ஜெயநாதன், இத்தியடி விநாயகர் கோயிலடி, வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை. (83669)

நல்ல நிலையில் கடைப் பாவனைக்குரிய கண்ணாடி சோக்கேசுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு.எஸ்.நடராஜா,12/25, கன்னாதிட்டி லேன், யாழ்ப்பாணம. (83680)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில், பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றுக்கு அண்மையில் கலட்டிச் சந்திக்கு கிட்டவாக 10 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு மாலை 3.00 மணிக்குப் பின் திருமதி க.இரத்தினசிங்கம், மே/பா திருமதி பு.ஐயாத்துரை, ஆலடி, அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கு. (83628)

## ஆங்கிலம் விசேடமாக

**O/L, A/L,** ஆண்டு 8-10, **G.A.Q,** அடிப்படை அறிவிலிருந்து **Grammar** உடன் துரிதமாகக் கற்பிக்கப்படும். ஆசிரியர்: 85,சிவன்கோயிலடி (சிவன்கோயில் பின்புறம்), திருநெல்வேலி. (83500)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்த கணிதம் பயிற்சியும், அனுபவமும் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளுடன் மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்படுகிறது. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். சந்திப்பு: தினசரி மாலை 3 மணிக்குப் பின்பு. **R.**பாலசுப்பிரமணியம், **B.Sc. (Cey.) Dip. -in-Ed., 17/1,** பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (83719)

## மணமகள் தேவை

வெளிநாட்டில் பிரபல நிறுவனத்தில் ஆளணி முகாமையாளராகப் பணிபுரியும் கார்த்திகை 3ஆம் பாதம், 1969இல் பிறந்த மணமகனுக்கு படித்த, ஆங்கிலம் பேசக்கூடிய, அழகான, பண்புள்ள மணப்பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். ஜாதகம், அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் தொடர்புகொள்ளவும். விள. இல.1197 மே/பா உதயன்.(83591)

உத்தராடம் 2ஆம் கால், 06.05.1961 இல் பிறந்த (பகல் 11.58) உதயச் செவ்வாய் உடைய கல்லூரி ஆய்வுகூட உதவியாளருக்கு மணமகள் உடன் தேவை. தொடர்பு **UNITED,** திருமண சேவை, **c/o** க.ஜெயராணி, நவாலி வடக்கு, சனசமூக நிலையம் அருகில். **(C/15066)**

## மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 7இல் செவ்வாய் (3ஆம் கால்), பூராடம், 16.10.1980 (நேரம் 9.40 இரவு) இல் பிறந்த மணமகளுக்கு ஸ்பொன்சர் செய்து அழைத்துச் செல்லக்கூடிய வெளிநாட்டு மணமகன் தேவை. உடன் தொடர்பு: **UNITED** திருமண சேவை, **c/o** க.ஜெயராணி, நவாலி வடக்கு, சனசமூக நிலையம் அருகில். **(C/15067)**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 8இல் செவ்வாய்க்குற்றம் உள்ள (பாவம்35) பட்டதாரி ஆசிரியைக்கு பொருத்தமான மணமகன் தேவை. அரசாங்கத் தொழில் புரிபவர்கள் விரும்பத்தக்கது. விள. இல. 1197,மே/பா உதயன். (83709)

## திருமண சேவை

ஸ்ரீராகவேந்திர ஜோதிட நிலையத்தில் சகல வயது ஆண், பெண் திருமண ஜாதகங்கள் கைவசமுண்டு. ஜாதக கிரக தோஷங்களுக்கும், செவ்வாய் கிரக தோஷத்துக்கும் பரிகாரம் செய்து திருமணப் பொருத்தம் செய்து வைக்கப்படும். தொடர்பு: ஸ்ரீராகவேந்திர ஆலயம், **159A,** கோயில் வீதி, நல்லூர். (83410)

## தவறிவிட்டது

சோமசுந்தரம் ஆனந்தராசா என்பவருடைய விசேட அ.அட்டை (இல. 0904023698) 14.01.2001 யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ராஜா வர்த்தக நிலையம் (அண்ணா கோப்பி முன்பாக), திருநெலவேலி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (83674)

செல்லையா சுப்பிரமணியம் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 452711893**X**) திருநெல்வேலி சந்தியடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 156, பருத்தித்துறை வீதி, நல்லூர் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (83695)

34, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த சிவபத்தன் பிறேமாவதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்கூறப்பட்ட முகவரியில் ஒப்படைக்கவும். (83723)

மந்துவில் கிழக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை செல்வகுமார் என்பவருடைய தே.அ. அட்டையும் (இல.810234563**V**), விசேட அ.அட்டையும் (இல.091049232) 01.02.2001 இல் தாவடிச் சந்திக்கும் இணுவிலுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இரா.இராசதுரை, **K.R.R.** தொலைத் தொடர்பு சேவை, நாகம்மாள் வீதி, உடுவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். **T.P.070-212674.** (83721)

மீசாலையைச் சேர்ந்த கந்தசாமி இராஜேஸ்வரி என்பவருடைய தாலியுடன் கூடிய கொடி 17.01.2001 அன்று ஆவரங்காலிற்கும் நிலாவரைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து காமதேனு ஸ்ரோர்ஸ், வட்டுக்கோட்டை, சங்கரத்தை எனும் முகவரியில் கொடுத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (83718)

கச்சாய் தெற்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நாகருதன் என்பவரது விசேட அ.அட்டை (இல. 091025271) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஞானசுந்தரம் செல்வநாயகி, செங்குந்தர்வீதி, கரவெட்டி கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (83729)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழி புறொயிலர், கல்பேட், சேவல் என்பன தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (83668)

இறைச்சிக்கோழி **(BROILERS)** கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (83622)

புறொயிலர், சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். மற்றும் லவ்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. 31,மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வ[illegible]வு). (83638)

நிறைகூடிய இறைச்சிக்கோழி புறொயிலர் **(BROILER)** மொத்தமாகவும் சில்லறையாகவும், விலை குறைக்கப்பட்டு விற்பனைக்குண்டு. தொடர்பு: 139, 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (83651)

இறைச்சிக்கோழி **(Broiler)** சேவல் மொத்தமாகவும், சில்லறையாகவும் சுத்தம் செய்து வேண்டிய நிறையில் பெற்றுக் கொள்ளலாம். இல.68, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம்.(மீண்டும் வாடிக்கையாளரின் நன்மை கருதி மேற்காணும் முகவரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது). (83671)

இறைச்சிக்கோழி **(BROILER)** விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (83722)

## T.V. விற்பனைக்கு

**SONY 2068, 2090, 2092 (20"), SONY 14"** (கலர்),**SONY 12"** (கறுப்பு வெள்ளை) **A/C D/C, SINGER 12"** (கறுப்பு வெள்ளை)**A/C D/C, GOLDSTAR** (கறுப்பு வெள்ளை) முதலியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **N.T.** ராஜன், 140, கே.கே.எஸ். வீதி (சத்திரத்துச் சந்தி முனபாக), யாழ்ப்பாணம். (83584)

## இசைவகுப்புக்கள்

எமது 'நியூ வீணாகானம்' இசை மன்றத்தின் சகல இசை வகுப்புகளும் தைப்பூசத்தன்று ஆரம்பம். மேலதிக விவரங்களுக்கு **16/2,** கச்சேரி நலலூர் வீதி, யாழ்ப்பாணம், 60, வைமன வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (83524)

## மணப்பெண்கள் தேவை

1973ஆம் ஆண்டு பிறந்த, ஜேர்மனியில் தொழில் புரியும், கிரக பாவம் குறைந்த மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. 1975ஆம் ஆண்டு பிறந்த 8இல் செவ்வாய் உடைய பயிற்றப்பட்ட ஆசிரிய மணமகனுக்கும், சொந்தமாகக் கடை வைத்திருக்கும் மணமகன்களுக்கும் மணப்பெண்கள் தேவை. குறிப்பு, புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். பரந்தாமன் ராசாத்தி, அபிராமி திருமண சேவை, ஆடியபாதம் சந்தைவீதி, முதலாம் ஒழுங்கை, கொக்குவில். (83708)

## தபால் மூலம் ஆங்கிலம்

சுலபமான முறையில் தபால் மூலம் ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது. நேரிலும் பயிற்சி பெறலாம். ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை, (நாகலிங்க சுவாமிகள் நினைவாலயம் அருகில்). (83652)

## செவ்வாய் மாற்றம்

07.02.2001 இல் செவ்வாய் மாற்றம். 11.04.2001 வரை சனி வக்கிர மாற்றம். ரூபா **10/-.** எல்லா ராசிப் பலன்கள் எங்கும் விற்பனையாகின்றன. கணிப்பாசிரிர் - சத்யா, 3ஆம் மைல், ஆனைக்கோட்டை. (83682)

## கார் விற்பனைக்கு

பெற்றோல் பாவனையில் உள்ள **AUSTIN - ENGLAND** கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **S.**ஜீவரட்ணம், **34/2,** இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். (83699)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் தம்பிஐயா சண்முகநாதன்

(மின்மானி வாசிப்பாளர், இலங்கை மின்சாரசபை.)

தோற்றம் 01-09-1943 — மறைவு 15-02-2000

*திதி* 04.02.2001

**ஆண்டொன்று சென்றாலும் உங்கள்**
**ஆதரவு இல்லாமல் அலைகின்றோம்**
**காலம்தான் போனாலும் உங்கள் நினைவு**
**எம் கண்களை கண்ணீரால் கரைக்கின்றன**
**எம் கண்கள் இமைப்பதற்குள் - ஆண்டவன்**
**உனை தன்பாதம் அழைத்ததன் காரணமேதோ?**

உம் பிரிவால் துயறுறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், சகோதர சகோதரிகள்.

*No.1,AV 3rd Lane,*
*Ariyalai, Jaffna.*
*93 2/9, Peterson court, Peterson Lane,*
*Colombo - 6.*

(C/15110)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 13 - 06 - 1942 — உதிர்வு 17 - 01 - 2000

## திருமதி பரமேஸ்வரி நாகராசா

திதி: 04.02.2001

**அன்புள்ளம் கொண்ட தெய்வமே!**
**ஆறாத்துயரில் எம்மை விட்டுப் பிரிந்து**
**ஆண்டொன்று சென்றாலும் - மாறாது**
**உங்கள் நினைவு, ஆறாது நம்துயர்.**

*உங்கள் ஆத்மசாந்திக்காக*
*இறைவனைப் பிரார்த்திக்கிறோம.*

*திருமகள்சோதி வீதி,*
*நவிண்டில், கரவெட்டி.*

- குடும்பத்தினர்.

(83614)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 27 - 10 - 1961 — மறைவு 05 - 01 - 2001

## திருமதி கலாவதி ஜெகதீஸ்வரன்

எம்மில்லத்தரசியாய் விளங்கியெமை
யாளாக்கி வைத்த தெய்வமே!
இன் சுவையோடுண்டியும் இனிய நற்றமிழும்
ஊட்டியெமை தலைநிமிர வைத்தாயே!
காலனிட்ட கட்டளையோ கலியுகத்தின்
சோதனையோ எமைவிட்டுப் பிரிந்தாயே!
இல்லை நின்னுடலெமை விட்டுப் பிரிந்தாலும்
நின் இனிய நினைவுகள்
என்றென்றும் எம்முள்ளங்களில்
அகல் விளக்காய் நிலைத்திருக்கும்!

ஓம் சாந்தி!.. சாந்தி!... சாந்தி!...

திரு. இ.ஜெகதீஸ்வரன் (கணவர்)
செல்விகள்: ஜெனோஜினி,
ஜெதுர்ஜினி (பிள்ளைகள்)
தில்லையம்பலம், செல்வமணி (பெற்றோர்)
சகோதரர்கள்.

*ஞானவைரவராலய வீதி,*
*உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.*

(83620)

மக்கள் எல்லோரும் பயவுணர்வின்றி இது எங்கள் நாடு என்ற உணர்வுடன் சுதந்திரதினத்தைக் கொண்டாடும் நிலை வர வேண்டும்.

# இந்த வார இராசி பலன்

## 04-02-2001 - 10-02-2001

| | | | |
|---|---|---|---|
| வெ | சனி | வியா சந் | ரா |
| | இராசிச் சக்கரம் | | |
| புத சூ▲ | | | |
| கே | | செவ் | |

**மாற்றம்:**

04 - 02 - 2001 இல் மிருகசீரிடம் - இடப இராசியில் சந்திரன் நிற்கும்.

07 - 02 - 2001 இல் செவ்வாய் விருச்சிக இராசிக்கு மாறும்.

அரசியல் பேச்சுக்களில் திடீர் திசைத் திருப்பம் ஏற்பட இடமுண்டு உலக நாடுகளின் அழுத்த நிலையின் வேகம் அதிகரிக்கும். சில தலைவர்களுக்கு நல்லதல்ல. வடக்குத் திசையில் யுத்தம் தொடர்ந்தபடி இருக்கும் இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் வரும். வடக்கில் இயற்கை, செயற்கை அழிவுகள் தொடரும் சில முக்கிய அரசியல் தலைவர்களுக்கு ஆபத்துக்கள் வர இடமுண்டு: மேற்கு உலகின் அழுத்த உச்ச நிலை மத்திய கிழக்கு கிழக்கு நாடுகளின் பொருளதார நிலைகளைப் பாதிக்கச் செய்யும், கிழக்கு நாடுகளில் இயற்கை-செயற்கை அழிவுகள் தொடர இடமுண்டு எனக்கிரக நிலைகள் காட்டுகின்றன.

## மேடம்

ஆடி அசைந்து ஓடும் ஆறு சமுத்திரம் வந்தவுடன் அமைதிகண்டாலும் அசையும் அலையாக மிதந்துவரும். அதேபோன்று பிறந்த நாம் இறக்கும் வரையும் வாழ்க்கை என்ற போராட்ட உணர்வுடன்தான் வாழுகின்றோம். இதேபோன்று தொழில் பீடங்களிலும் படபடவென்று அலுவல்களைச் செய்தபடி இருப்பீர்கள். ஓய்வு— நிம்மதி இல்லையா? எனக் கேட்பீர்கள். பொருள் சிந்தனை— சகோதரங்களின் உதவிகள், பெற்றோர் வழியிலிருந்து உதவி கிடைக்கும். புதிய நகையோ, புடைவையோ வாங்க எண்ணம் ஏற்படலாம். உணர்வுகளைக் கட்டுப்படுத்தவும். அல்லது உங்கள் கருத்துச் செயற்பாடுகளால் சில நல்லவர்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடலாம். இடமாற்றம் ஒன்று நிர்ப்பந்தத்தில் ஏற்படலாம். வயிற்று வருத்தம், உஷ்ண பீடைகள் —சளித் தொல்லைகள் வரும் வியாபாரத்துறை. பிரயாணத்துறை. பாதுகாப்புத் துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.

## இடபம்

சிலர் நல்லவர்களின் பெயர்களைச்சொல்லிச் சொல்லிசில அப்பாவிகளை ஏமாற்றியிருவளர்த்தபடி இருக்கின்றார்கள். இதைக் கண்டும் காணாதபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் பாடுபட்டப்பு நஷ்டங்களைத் தரலாம். பழைய பாக்கிகள் சில ருக்கு வரலாம். எதிர்பாராரின் உதவிகள் கிடைக்கும். இனஜன உதவிகள் கிடைக்கும். எதையும் எதிர்கொள்வீர்கள். வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். சலவருத்தம், தொண்டை நோ, இருதய வருத்தம் என்பன வரும். இடமாற்றம் — பிரயாணங்களை அவதானமாகச் செய்து வரவும். அல்லது பொருள் இழப்புக்கள் வரும். சட்டத்துறை, ஆசிரியத்துறை, சங்கீதத்துறை, ரீவித்துறை, பாதுகாப்புத்துறை, மருந்து வியாபாரம் போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.

## மிதுனம்

ஒரு நிறுவனத்தை நிர்வகிப்பது என்பது சாதாரண விசயமா? பொறுப்புமிக்க உங்கள் சேவையில் அடிக்கடி அசைத்துவிட எண்ணும் சிலரின் திட்டத்தால் கலக்கமுற்றுத் துன்பப்படுவீர்கள். மலை அசைந்தாலும், மனம் அசையாது செயற்படுங்கள். வெற்றி கிடைக்கும். எதிர்ப்பாளர்கள் எதிர்ப்புக்கள் தெரிவிப்பார்கள். பொருள் விஷயத்தில் அவதானமாக இருக்கவும். முதுகு வலி, வயிற்று நோ, தலைவலி, சளி என்பன வருத்தும். தூரதேசச் செய்திகளால் நன்மைகள் அதிகரிக்கும். செய்தித்துறை, தோட்டத்துறை, வங்கித்துறை, சட்டத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.

## கடகம்

பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா தெய்வாம்சம் பொருந்தியவர். அவரைப்பற்றி சில பத்திரிகைகளில் சில செய்திகளைக்கண்டு தியானமிருந்து உண்மைகளை அறிந்த போது — அவரே தரிசனத்தில் வந்து பல விளக்கங்களைத் தந்துள்ளார். உனக்குத் தந்த கடமைகளைச் செய்—உலகத்தில் உன்னைப் பற்றியும் என்னைப்பற்றியும் சிலர் உண்மை அறியாது தூற்றுவார்கள். அதைப் பொருட்படுத்தாது உனது சேவையைச் செய் என்றார். எனவே உங்கள் கடமையைத் தொழில்ஸ்தானத்தில் உறுதியுடன் செயற்படுத்துங்கள். குறைவு — நிறைவு ஏற்ற இறக்கங்களை இறைவன் பாதத்தில் விட்டுவிடுங்கள். தவறுகள் செய்பவர்களைவிட — உண்மைகளை அறியாது வதந்திகளைப் பரப்புபவர்கள் அநேகர் என உணர்வீர்கள், எதிர்ப்பாளரின் கோபத்திற்கு ஆளாவீர்கள். சலவருத்தம், இரத்த அழுத்தம், தலைச்சுற்றல் என்பன வரும். நகைத்துறை, அரசியல்துறை, ஆசிரியத்துறை, போன்ற துறையினர்களுக்கு நல்ல முன்னேற்றங்கள் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.

## சிங்கம்

நல்லவர்களுக்குத் துன்பம் வரும்பொழுது — தெய்வாம்சம் பொருந்தியவர்கள் வந்து உதவிகள் செய்வார்கள். எனவே உறுதியுடனிருந்து நல்லவற்றைச் செய்தபடி இருங்கள். சில கள்ள நெஞ்சங்கள் — நல்லவர்களைப் போல நடிப்பார்கள். இதை நீங்கள் அறிவீர்கள். நல்லவர்கள் என்றும் நல்லவர்களே. அவர்கள் பொறுமையுடன் இருப்பார்கள். உள்ளத்தில் நல்ல உள்ளம் என்றும் உறங்காது. எனவே தொழில் ஸ்தானத்தில் உங்கள் கடமைகளைச் செய்து நிறைவு பெறுங்கள். குடும்பத்தவர்களுடன் போட்டிகள் ஏற்படும். தாய்வழியினர் உதவிகள் செய்வார்கள். இடமாற்றங்கள் சகஜம். வயிற்றுநோ, கிருமித்தாக்கம், நாரிநோ என்பன கொடுக்கும். மருந்துத்துறை, வியாபாரத்துறை, குருத்துறை, பிரயாணத்துறை, பாதுகாப்புத்துறை, சட்டத்துறை போன்ற துறையினர்கள் நற்பலன்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி, சனி.

## கன்னி

கெட்டவர்கள் எப்பொழுதும் ஏமாற்றிக்கொண்டே இருப்பார்கள் — நல்லவர்கள் தான் அவதானமாக இருக்க வேண்டும். தொழில்ஸ்தானத்தில் போட்டிகள் இருந்தாலும் சிரித்துக் கதைத்துச் சமாளித்துக் கொண்டிருப்பீர்கள். குடும்பத்தினரின் அலுவல்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். வாகனம், வீட்டுச்சுகங்களை அடைவீர்கள், எதிர்ப்பாளருடன் நிதானமாக இருக்கவும். நீதித்துறை, கோயில்துறை, குருத்துறை, எண்ணெய்த்துறை, பிரயாணத்துறை போன்றவர்களுக்கு சோதனைகள், போட்டிகள் வரலாம். சளி, நாரிநோ, குடல், கிட்னி வருத்தங்கள், வாய்வுத்தொல்லைகள் ஏற்படும். செய்தித்துறை ரி.வித்துறை. கம்பியூட்டர் துறை, அச்சுத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளுகம் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி. சனி.

## துலாம்

வேகமான செயற்பாடுகளால் சிலர் வேதனைகளை அடைவார்கள். இனஜனங்களுடன் மனக் கருத்துவேறுபாடு வரத்தான்செய்யும். உள்ளபடி நடக்க யோசிப்பவர்களை — உலகத்தில் சிலருக்குப் பிடிக்காமல் இருப்பது இயற்கைதானே. தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்பு, மாற்றங்கள் சகஜம். திடீர்ப் பிரயாணம் சிலருக்கு ஏற்பட இடமுண்டு. உறவினர்களின் உதவிகள் இருக்கும். உடல் நிலைத்தாக்கத்தால் செலவுகள் அதிகரிக்கும். பொருளால் ஓரளவு திருப்தி ஏற்படும். ஆனால் செலவு செய்வதில் நிதானமாக இருக்கவும். வயிற்று வருத்தம் — போராட்ட உணர்வு, உடல் களைப்பு, சிறுநீரகப் பிரச்சினை, தலைவலி என்பன இருக்கும். வாகன யோகம் உண்டு, செய்தித்துறை, ரீவித்துறை, கொம்பியூட்டர்துறை, கடல்துறை போன்றதுறையினர்களுக்கு அதிக இலாபங்கள் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, புதன், வெள்ளி. சனி.

## விருச்சிகம்

கூரிய கத்தியை அவதானமாகப் பாவிக்க வேண்டும். அதனால் வேகமான நன்மைகளும் வரும் — ஆழமான காயங்களும் வரும். எனவே உங்கள் ஆழமான, புத்திக்கூர்மையான, உயிர்ச் செறிவான கருத்துகளால் பலர் நன்மை அடைவார்கள். எனவே தொடர்ந்து உங்கள் கடமைகளைத் துணிவுடன் செயல்படுத்துங்கள். வெற்றி கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் சகஜம். சிலருக்கு இடமாற்றங்கள் வர இடமுண்டு. கிருமித் தாக்கம் — சிரசு வருத்தம் — அடிக்கடி கோபம், கை கால் பிடிப்பு, வழுக்கி வீழுதல் என்பன வரலாம். எதிர்ப்பாளருடன் நிதானமாக இருக்கவும். மருந்துத்துறை, பாதுகாப்புத்துறை, இரும்புத்துறை, குருத்துறை போன்ற துறையைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். அயலவர்களுடன் நிதானமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, புதன், வெள்ளி, சனி.

## தனுசு

உங்கள் புத்தி நுட்பத்தால் எவரையும் கண்டு பிடித்து விடுவீர்கள். நியாயத்திற்காக எவரையும் எதிர்த்து நிற்பீர்கள். அதில் தவறில்லை. எனவே தொழில் ஸ்தானத்தில் பலவிதமான கருத்துக்கள் சிலரால் பரப்பப்படலாம். ஆயினும் சாதுரியமாக எதையும் சமாளித்தபடி இருப்பீர்கள். வயிற்றுநோ, கை கால் உரசல் காயங்கள், குடல் வருத்தங்கள் என்பன வரும். எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமைகள் ஏற்படும். தூரதேசச் செய்திகள்வரலாம். செய்தித்துறை, வியாபாரத்துறை, தபால்துறை, கொம்பியூட்டர் துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு. திங்கள், புதன், வெள்ளி.

## மகாதேவா ஜோதிடம்

## மகரம்

மனிதர்கள் செய்யும் செயற்பாடுகளால் இயற்கை பல அழிவுகளைத் திடீரெனத் தரும் மழை - காற்று - பூகம்பங்கள் ஏன் வருகின்றன? ஷெல் வீச்சுக்கள் ஏன் நடக்கின்றன. ஒருபக்கம் செயற்கை அழிவு-மறுபக்கம் இயற்கை அழிவு மொத்தத்தில் அழிவு நடக்கின்றன. ஆக்கம் குறைகின்றது மனிதர்கள் அவதி, துன்பம் அடைகின்றார்கள். எனவே தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருந்து செயற்படுங்கள். கவனமாக இருந்து இலாபங்களை அடைவீர்கள். குடும்பத்தில் சுபமங்களப் பேச்சுக்கள் சகோதரர்களுக்கு ஏற்படலாம், நரம்புப் பலவீனம், மனக்குழப்பம், மூட்டுவலி, தலைவருத்தங்கள் என்பன வர இடமுண்டு. இசைத்துறை, ரி.வி, கம்பியூட்டத்துறைகள், நகைத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள். சனி.

## கும்பம்

வன்செயலில் தேடிய தேட்டமும், வன் சொற்களால் சொல்லிய சொற்களும் என்றும் அழிவுகளைத்தான் தரும். எனவே உண்மை-நம்பிக்கை சத்தியத்திற்காக பொறுமையுடன் செயற்படுபவர்கள் தான் காலகதியில் நன்மைகளை அடைகின்றார்கள்- எனவே தொழில்ஸ்தானத்தில் பொறுமையாக இருந்து இலாபங்களை அடைய முற்படுங்கள். பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள் அல்லது பொருள் இழப்புக்கள் ஏற்பட இடமுண்டு தந்தை வழி உறவினர் ஒருவருக்கு நல்லதல்ல. சகோதரர்களைப் பற்றிய செய்திகள் மகிழ்ச்சி தரும். நாரிநோ, கால் வருத்தம், மூட்டு வருத்தம், தோல் வருத்தம், மறதி என்பன தொல்லை தரும், இசைத்துறை, ஹோட்டல்துறை, போக்குவரத்துத்துறை, சந்தைத்துறை, நகைத்துறை, புடைவைத்துறை போன்ற துறையைச் சார்ந்தவர்களுக்கு பலவித நன்மைகள் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், சனி.

## மீனம்

அவருக்கு உதவி செய்வதனால் எனக்கு என்ன இலாபம்? என அடிக்கடி யோசிக்கிறீர்களாமே. எல்லா அலுவல்களிலும், எல்லா நேரங்களிலும் இலாபங்கள் கிடைக்கின்றனவா? அதிகம் கதைத்துக் கொண்டிருக்காமல் தொழில்ஸ்தானத்தில் கடமையைச் செய்யுங்கள் இலாபங்கள் அதிகரிக்கும். கோபத்தால் நஷ்டங்கள் வரலாம். சகோதரர்களின் அலுவல்களுக்காக ஓடியாடித்திரிவீர்கள், காரியானுகூலம் உங்கள் வாக்குச் சாதுரியத்தில் தங்கியுள்ளது. எதிரிகளுடன் போட்டி போட்டு வெல்லுவீர்கள். சளி, காய்ச்சல், மூட்டு, நரம்புப்பிடிப்பு என்பன வரும். நீதித்துறை, கோயில் துறை, வியாபாரத்துறை, எண்ணெய்த்துறை, பிரயாணத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், சனி.


கைதடி தவத்திரு.

### ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் வருடாந்த குருபூசை

காலம் : 06-02-2001 செவ்வாய்க்கிழமை காலை 9 30 மணி

இடம் : சத்திர ஞானவைரவர் தேவஸ்தானம் யாழ்ப்பாணம்.

தலைமை: திரு கு. கங்கைவேணியன்

பூஜை: திருமதி கு. அன்னபூரணி அவர்களின் தலைமையில் ஆச்சிரம மாணவிகள்.

சிறப்புரைகள்: தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் அருட்கடாட்சம் பெற்ற அடியார்கள்.

அன்பர்கள், அடியார்கள், யாவரும் இந்நிகழ்வில் கலந்து குரு அருள் பெற்று மகேஸ்வரப் பூசையிலும் கலந்து செல்லுமாறு வேண்டுகின்றோம்.

இ. குழந்தைவடிவேலு J. P.
தலைவர்

க. செல்வராஜா G. S. — பொதுச் செயலாளர்
பொ. கந்தசாமி A.R — நிதிச்செயலாளர்

விளம்பர ஆதரவு:
கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா களஞ்சியம்
சுன்னாகம் — மானிப்பாய்.

( 83724)

# மணி விழா வாழ்த்து



மணிவிழா நாயகன் மானுடநேயன்

"குன்றின் மேல் விளக்கென மிளிரும்"

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

(உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதி, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்)

அவர்களை

*பாராட்டி வாழ்த்துகின்றோம்*

யாழ்.பல்கலைக்கழக நிறைவேற்று அலுவலர் ஒன்றியம்.

(83692)

# வாழ்த்தி மகிழ்கின்றோம்

கோண்டாவில் திருவருள் மிகு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் ஆலய பரிபாலன சபைச் செயலாளராகிய



**திருவாளர் இ.சீ.தேவராசா** அவர்கள்

யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக யாழ்.மாவட்ட நீதிபதி **திரு.R.T.விக்னராஜா** அவர்களது முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவரது சேவைகள் தொடர எல்லாம் வல்ல முருகப் பெருமானது அருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

சிவஸ்ரீ சி.ஆறுமுகக் குருக்கள்,
(பிரதமகுரு)

சிவஸ்ரீ த.ரவீந்திரராசா ஐயா.
(ஆலயக்குரு)

*திருவருள்மிகு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் தேவஸ்தானம், இருபாலை வீதி, கோண்டாவில்.*

(83691)

அனைவரின் வேண்டுகோளுக்கு இணங்க

**மாபெரும் பூங்கன்றுக் கண்காட்சியும் விற்பனையும்**

பெப்ரவரி 16, 17, 18 ஆகிய தினங்களில்

பிளான்ட் பரடைஸ்
152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- கண்காட்சியின் முழு விவரமும் பின்னர் விளம்பரப்படுத்தப்படும். (83648)

# இலங்கை வங்கி அறிவித்தல்

53 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 05. 02. 2001 திங்கட்கிழமை விசேட வங்கி விடுமுறை ஆதலால் அன்றையதினம் யாழ்ப்பாண மாவட்ட சகல இலங்கை வங்கிக் கிளைகளிலும் வாடிக்கையாளருக்கான நடவடிக்கைகள் நடைபெறாது என்பதை அறியத் தருகிறோம்.

பிரதான முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ்.மேற்நகரக் கிளை

பிரதேச முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

(C/15127)

## தையல் கண்காட்சி

வேலணை,பெப்.4

கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் தீவுப் பகுதி தெற்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவுள்ள தையல் மனையியல் கண்காட்சி நயினாதீவு மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அப்பகுதி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (க-167)

## யாழ். நவீன சந்தை புனரமைப்புக்கு மேலும் 50 லட்சம்!

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ்ப்பாணம் நவீன சந்தை புனரமைப்புக்கு வடக்கின் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையினால் மேலும் 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 80 லட்சம் ரூபா இந்த நவீன சந்தைக் கட்டடத்துக்கு ஒதுக்கப்பட்டது தெரிந்ததே.

இந்த நிதிக்கான வேலைகள் தற்பொழுது முடிவடையும் நிலையில் இருப்பதாக மாநகர சபை வட்டாரங்கள் தெரிவி்தன.

(க-5)

# இப்பொழுது புதிய இடத்தில் எங்கள் சேவை

எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களான உங்களுக்கு மேலும் சிறப்பாகச் சேவைகளை வழங்கும் பொருட்டு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகம் 2001-02-05 தொடக்கம் இல.12, கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் கட்டடத்தின் முதலாவது தளத்துக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்**

"ரக்ஷண மந்திரம்" 21, வெக்சோல் வீதி, கொழும்பு- 02

*தொலைபேசி:-* 325311-16, 327322-34, 435301-04, 320906, 329748

*தொலைநகல்:-* 447742 (83647)

ஸ்ரீ ராதா கிருஷ்ணா துணை

# திருமண வாழ்த்து

**இன்று 04-02-2001 அவுஸ்திரேலியாவில் திருமணம் செய்து கொள்ளும்**

**சிவஸ்ரீ சோ.பரமசாமிக் குருக்கள்** தம்பதியரின் கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி **புவனேஸ்வரசர்மா**



**பிரம்மஸ்ரீ ம.ஜெயராமசர்மா** தம்பதியரின் கனிஷ்ட புத்திரி சௌபாக்கியவதி **.சோபனா**

தம்பதிகளை மங்களம் பொங்க பல்லாண்டு வாழ்கவென மனமகிழ்ந்து வாழ்த்துகிறோம். பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு பதினாறும் பெற்று மங்களம் பொங்க மனமகிழ்ந்து வாழ்த்துவோர்:

திரு.திருமதி பிரகதீஸ்வர சர்மா கலாவதி,
(ஆசிரிய ஆலோசகர்)

திரு.திருமதி சாயிஜீவானந்த சர்மா ஜானகி,
(ஸ்ரீலங்கா ரெலிக்கொம்)

திரு.திருமதி சிவகுமாரக் குருக்கள் கீதநந்தினி,
(மலேசியா)

செல்வி சோமசுந்தரக் குருக்கள் பூபதியம்மா.

*யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா.*

குறிப்பு: வாழ்த்த விரும்புவோர்
T.P: 0061 089461476
அவுஸ்திரேலியா.

(83686)

உ
ஸ்ரீ ராமஜெபம்

# விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் விக்கிரம வருஷம் தைத் திங்கள் 23ஆம் நாள் (05.02.2001) திங்கட்கிழமை திருவாதிரை நக்ஷத்திரம் துவாதசி திதியும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுப தினத்தில் முற்பகல் 9.45 மணி முதல் 10.38 மணி வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

தெல்லிப்பழை முத்துமாரி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சதாசிவ குருக்களின் பௌத்திரனும் பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதி சர்மாவின் கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி **நாராயணசர்மாவிற்கு**

கீரிமலை நகுலேஸ்வரர் ஆதீனத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ கார்த்திகேச குருக்களின் பௌத்திரியும் பிரம்மஸ்ரீ தியாகராஜ குருக்களின் கனிஷ்ட புத்திரி சௌபாக்கியவதி **தேவசேனாவை**

கன்னிகாதான, திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்ய தெல்லியூர் முத்துமாரி அம்மனினதும் கீரிமலை நகுலேஸ்வர சுவாமியினதும் திருவருள் கிருபையை முன்னிட்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளதால் மணமகள் இல்லத்தில் நடைபெறும் மேற்படி முகூர்த்த வேளையில் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: **06.02.2001 செவ்வாய் மணமகள் இல்லத்தில் நடைபெறும்.**

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்:

பிரம்மஸ்ரீ ச. இரத்தினசபாபதி சர்மா தம்பதிகள்
*உபய கதிர்காமம், புலோலி தெற்கு, புலோலி.*

பிரம்மஸ்ரீ கா. தியாகராஜ குருக்கள் தம்பதிகள்
*பேக்கரி லேன், சண்டிலிப்பாய்.*

சுபம்

(83687)

# பூகம்ப மீட்புப் பணியாளர்களுக்கு குஜராத்தில் புதியதொரு சிக்கல்

புஜ், பெப். 4

குஜராத் மாநிலத்தில் பூகம்ப மீட்புப் பணியாளர்கள் புதிய சிக்கல் ஒன்றை எதிர்கொண்டுள்ளனர்.

7 நாள்களுக்கு முன்னர் ஏற்பட்ட பூகம்பத்தால் தகர்ந்த கட்டட இடிபாடுகளிடையே சிக்கி உயிரிழந்தவர்களின் சடலங்கள் இப்போது அழுகி துர்நாற்றம் வீசத் தொடங்கி விட்டன.

அழுகிய இந்தச் சடலங்களால் அப்பிரதேசத்தில் தொற்று நோய்கள் பரவி வருகின்றன.

கட்டட இடிபாடுகளுக்கிடையில் சிக்கியவர்கள் எவரும் உயிருடன் இருக்கும் சாத்தியங்கள் இல்லாததாலும், தொற்று நோய்கள் பரவக் காரணமான சடலங்களை விரைவாக அப்புறப்படுத்தி அழிப்பதற்காகவும் மீட்புப்பணியாளர்கள் சடலங்களை இடிபாடுகளுடன் மொத்தமாக இயந்திரங்கள் மூலம் அள்ளி அப்புறப்படுத்த முடிவு செய்துள்ளனர்.

ஆனால் பூகம்பத்தால் காணாமல் போயுள்ளவர்களின் உறவினர்கள் கட்டட இடிபாடுகளுக்கிடையில் எவரேனும் உயிருடன் இருக்க முடியும் என்று நம்புகின்றனர்.

இதனால் மீட்புப் பணியாளர்களின் செயற்பாட்டுக்கு அவர்கள் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

அவர்கள் மீதுள்ள இரக்கம் ஒரு புறத்திலும், சடலங்களால் பரவும் தொற்றுநோய்கள் மறுபுறத்திலுமாக மீட்புப் பணியாளர்கள் தர்மசங்கடமான நிலையை அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. [ஒ-7]

# பூகம்பம் குறித்து ஆருடம் கூறிய சோதிடர் பொலீஸாரால் கைது!

குஜராத்தில் மீண்டும் கடுமையான பூகம்பம் ஏற்படப் போவதாக ஆருடம் கணித்த ஜோதிடர் கைது செய்யப்பட்டார்.

அம்பாலா என்ற இந்த ஜோதிடர் குஜராத்தில் மீண்டும் நேற்றுக்காலை பூமியதிர்ச்சி ஏற்படும் என்று ஜோதிடம் கணித்துக் கூறியிருந்தார்.

இந்தச் செய்தியை சகல உள்ளூர்ப்பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன.

இத்தகவலை அடுத்து எழுந்த பீதியினால் மக்கள் தத்தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி நேற்று முன்தினம் இரவு முதல் வெட்ட வெளிகளில் கடுங்குளிரையும் பொருட்படுத்தாது தங்கினர்.

பின்னர் நேற்றுப்பகல் ஜோசியர் குறிப்பிட்ட நேரம் கடந்த பின்னரே பயம் நீங்கி அவர்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பினர். தற்போது ஜோசியர் அம்பாலா கைதாகியுள்ளார்.

இதற்கிடையில், இந்திய வானியல் துறை விஞ்ஞானிகள், எந்த நேரத்தில், எந்த இடத்தில் எந்த அளவுக்கு நில நடுக்கம் ஏற்படும் எனத் துல்லியமாக அறியக்கூடிய தொழில் நுட்பம் உலகில் கண்டுபிடிக்கப்படவில்லை என்று விளக்கமளித்துள்ளனர். (ஒ-7)

## கட்டடம் கட்டியோர் கைது!

அகமதாபாத்தில் கட்டட ஒப்பந்தக்காரர்கள் 9 பேரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

பூமியதிர்ச்சியின் போது பழைய கட்டடங்கள் இடியாமல் தாக்குப் பிடித்ததாகவும் ஆனால் இவர்கள் சமீபத்தில் கட்டிய கட்டடங்கள் அடியோடு தகர்ந்து விழுந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவர்கள் தரக்குறைவான கட்டடப் பொருள்களைபயன்படுத்தியதாலேயே இவ்வாறு நடந்ததாகப் பொலீஸ் தெரிவித்துள்ளது.

# இந்திய நிலக்கரிச் சுரங்கத்தில் உயிருக்குப் போராடும் 35 பேர்!

## மீட்புப் பணிகள் தீவிரம்!!

ராஞ்சி, பெப். 4

இந்தியாவில் புதிதாக உருவாக்கப்பட்ட ஜார்கண்ட் மாநிலத்தில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றுக்குள் சிக்கிய பணியாளர்களை மீட்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டன்காவில் உள்ள பாரிய நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் நேற்று முன்தினம் 200 பேர் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது அருகில் இருந்த கைவிடப்பட்ட சுரங்கம் ஒன்றில் நிறைந்திருந்த வெள்ளம் உடைப்பு ஒன்றின் வழியாக இந்தச் சுரங்கத்துக்குள் பாய்ந்தது.

தொழிலாளர்கள் பலர்சுரங்கத்துக்குள் இருந்து வெளியேறித் தப்பித்த சமயத்தில் வெள்ளத்தினால் ஏற்பட்ட மண்சரிவு வெளியேறும் பாதையை அடைத்துக் கொண்டது.

இதனால் இரு அதிகாரிகள் உட்பட 35 பேர் உள்ளேயே சிக்கிக் கொண்டுள்ளனர். நேற்றுடன் இவர்களுடனான தொடர்பு அற்றுப்போயுள்ளது.

தற்போது6 பாரிய நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் சுரங்கத்துக்குள்ளிருந்து தண்ணீர் வெளியேற்றப்படுவதாகவும் –

சிக்கியுள்ளவர்களை உயிருடன் மீட்கமுடியுமென்று நம்புவதாகவும்— மீட்புப் பணி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியாவின் பிரதானநிலக்கரிச் சுரங்கங்கள் ஜார்கண்ட் மாநிலத்தில் அமைந்துள்ளன.

1980 களில் சுரங்க விபத்துக்களில் 200 பேர் வரை இறந்துள்ளனர்.

1995 ஆம் ஆண்டு மழையால் சுரங்கம் ஒன்றினுள் நிலச்சரிவு ஏற்பட்டு 70 தொழிலாளர்கள் இறந்தனர். (ஒ-7)

## மேற்குக்கரை மோதலில் 5 பேர் பலி!

காஸா, பெப். 4

மேற்குக்கரை மற்றும் காஸாவில் இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையேநடந்தமோதல்களில் இரு இஸ்ரேலியர்களும், இரு பலஸ்தீனர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேற்குக் கரைப்பகுதியில் இஸ்ரேலிய இராணுவத்தினருக்காக உளவு பார்த்த குற்றத்துக்காக பலஸ்தீனர் ஒருவருக்குப் பலஸ்தீன அதிகாரிகள் மரண தண்டனை நிறைவேற்றி உள்ளனர். (ஒ)

# வாஜ்பாய்-முஷாரப் இடையில் உணர்வுபூர்வ உரையாடல்

## பூகம்பம் ஏற்படுத்திய சந்தர்ப்பம்

பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப்பும், இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் தொலைபேசி மூலம் உணர்வுபூர்வமான உரையாடலை நடத்தினர்.

நேற்று முன்தினம் இரவு முஷாரப் வாஜ்பாயுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டதையடுத்து இரு தலைவர்களும் 5 நிமிடங்கள் ஹிந்தியில் உரையாடினர்.

அப்போது பாகிஸ்தான் வழங்கிய பூகம்ப நிவாரண உதவிகளுக்கு வாஜ்பாய்நன்றி கூறினார்.

1999 ஆம் ஆண்டு முஷாரப் பாகிஸ்தானில் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் வாஜ்பாயுடன் அவர் பேசுவது இதுவே முதல் தடவையாகும்.

பூகம்ப நிவாரணத்துக்காக பாகிஸ்தான் வழங்கிய கூடாரப் பொருள்கள் மற்றும் போர்வைகளை ஏற்றியபடை விமானங்கள் இரு நாள்களின் முன்னர் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தன.

பாகிஸ்தானிய விமானப் படை விமானம் வரவேற்புடன் இந்தியாவில் தரையிறங்குவதும் இதுவே முதல் முறையாகும். [ஒ-7]

# இந்தோனேசிய முன்னாள் அதிபர் சுகாட்டோவின் நண்பருக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை

இந்தோனேசியாவின் முன்னாள் சர்வாதிகாரி சுகாட்டோவின் நண்பர் ஒருவருக்கு ஊழல் வழக்கில் 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மரவர்த்தகரான முகமது ஹசன் என்பவரே தண்டனை பெற்றவராவார்.

சுகாட்டோவின் ஆட்சிக் காலத்தில் அவரது செல்வாக்கைப் பயன்படுத்தி ஊழல் செய்ததாகவும் —

இதன் மூலம் அரசுக்கு 2 கோடி 40 லட்சம் டொலர்கள் இழப்பை ஏற்படுத்தியதாகவும் —

ஹசன் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்தன.

ஹசன் விசாரணைக்காக 9 மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்காலத்தில் தடுப்புக்காவலில் இருந்த காலம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்று இந்தோனேசிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தனக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்யப் போவதாகக் ஹசன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டின் இறுதியில் பல கோடி ரூபா ஊழல் புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் சர்வாதிகாரி சுகாட்டோவின் உடல் நிலை மோசமான நிலையில் இருப்பதால், இரக்கத்தின் அடிப்படையில் அவர் மீதான வழக்குகள் அனைத்தும் விலக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. [ஒ-7]

## வியட்நாம் விஜயம்

சிங்கப்பூர் அதிபர் எஸ். ஆர். நாதன் அடுத்த வாரம் வியட்நாமுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ள உள்ளார்.

வியட்நாம் அதிபரின் அழைப்பின் பேரில் 5 நாள் விஜயமாக அவர் வியட்நாம் செல்ல உள்ளார். (ம—6)

## டாக்காவில் வேலை நிறுத்தம்

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இடம்பெற்ற வேலை நிறுத்தத்தால் நகரின் அனைத்துப் பணிகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

ஊழலையும், பொருள்களின் விலையேற்றத்தையும் எதிர்த்து 11 இடதுசாரி எதிர்க்கட்சிகள்ஒன்றிணைந்து இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தின.


உ
ஸ்ரீ ராம ஜெயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகர ஸ்ரீ விக்கிரம வருடம் தைத் திங்கள்
22 ஆம் நாள் (04—02—2001) ஞாயிற்றுக்கிழமையான இன்று
பூர்வபட்ஷ ஏகாதசி திதியும், மிருகசீரிட நட்சத்திரமும், கூடிய சுபவேளை
பகல் 1-30 மணி முதல் 3-30 மணி வரைவரும் கடக லக்கின
சுபமுகூர்த்த வேளையில்

எமது செல்வப் புதல்வன்
திருநிறை செல்வன்
யோகராசா
(குட்டி)
அவர்களுக்கும்

எமது செல்வப் புதல்வி
திருநிறை செல்வி
பாலசசி
(சசி)
அவர்களுக்கும்

இறைவன் துணை கொண்டு லண்டன் சிவன் கோயில் மண்டபத்தில்
திருமணம் நடத்தப் பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால்,
இன்று, சங்குவேலி மணமகள் இல்லத்தில் நடைபெறும்.
விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

திருமதி ஆறுப்பிள்ளை
குடும்பத்தினர்.

நி. முகவரி:– கீரிமலை,
நகுலேஸ்வரம்.
த. முகவரி:. வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

திரு. திருமதி நாகரத்தினம்
குடும்பத்தினர்.

நி. முகவரி:- வீமன்காமம்,
மாவிட்டபுரம்.
த. முகவரி:- சங்குவேலி,
மானிப்பாய்.

(83710)



வியாபாரிமூலை – இன்பர்சிட்டி

## ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் சப்பற வெள்ளோட்ட விழா

திருநெல்வேலி விஸ்வப்பிரம்மஸ்ரீ ஸ்தபதி சிற்பக் கலாவாரிதி ந. சற்குருநாதன் குழுவினர்களால் நிர்மாணிக்கப்பட்ட சகடையுடன் கூடிய இரண்டு அறைச் சப்பறத்தை 07–02–2001 புதன்கிழமை தைப்பூசத்திலன்று முற்பகல் 11 30 மணி அளவில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. பா. சுப்பிரமணியம் அவர்களும், வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி அவர்களும் வடம் பிடித்திழுத்து சப்பற வெள்ளோட்டத்தை ஆரம்பித்து வைப்பார்கள் என்பதை எம்பெருமான் அடியார்களுக்கு அறியத்தருகிறேன்.

வே. க. கந்தையா
ஆலய நிர்வாகப் பொறுப்பாளன்

(வி/15100)

# திட்ட அலுவலர் அனைவருக்கும் பதவி உயர்வுடன் இடமாற்றம்?

வடக்கு — கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் திட்ட அலுவலர்கள் அனைவருக்கும் இம்மாதம் 6 ஆம் திகதி திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்களுக்கான பதவி உயர்வுக் கடிதங்கள் கொழும்பிலுள்ள திட்டம் செயற்படுத்தல் அமைச்சு அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

வடக்கு — கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் 52 திட்ட அலுவலர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. திட்ட அலுவலர்கள் அனைவரையும் திட்டம் செயற்படுத்தல் அமைச்சு உள்வாங்கி திட்டமிடல் சேவையின் தரம் ii வகுப்பு ii இற்கு பதவி உயர்த்தி திட்டமிடல் உதவிப்பணிப்பாளர்களாக நியமனம் செய்வதற்கான கடிதங்களை வழங்கவுள்ளது.

திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்களாகப் பதவி உயர்வு வழங்கப்படும் இவர்கள் தற்போது கடமையாற்றும் பிரதேச செயலகங்களில் இருந்து வேறு பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் எனத் தெரிய வருகின்றது. (ஐ-175)

## நூல் வெளியீட்டு விழா

வடமராட்சி, பெப். 4

மதுரை தமிழ்ச்சங்க பண்டிதை ஸ்ரீமதி ந. பத்மாசனி அம்மாள் அருளிய புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புலோலி பசுபதீஸ்வரர் பர்வதவர்த்தனி கலா மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத்தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் நூலை வெளியிட்டு உரையாற்றுவார்.

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரும் உரையாற்றுவார்கள். [க-173]

## அன்பளிப்பு

வடமராட்சி, பெப். 4

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபைக்கு பருத்தித்துறை பிரபல சட்டத்தரணி இராமசாமி உருத்திரா 5 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

இவ் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை வல்வெட்டித்துறையும் அதனை அண்டியுள்ள கிராமங்களைச் சேர்ந்தோருக்கும் கண்பரிசோதனை செய்து இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை மாதந்தோறும் வழங்கி வருகிறது. (க-173)

## மகளிர் தின கட்டுரைப் போட்டி

வலிகாமம் தெற்கு, பெப். 4

அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி வலிகாமம் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கு இடையே கட்டுரைப்போட்டி நடைபெற உள்ளது. 6 — 7; 8 — 9; 10 — 11; 12 — 13 என்ற தரங்களின் அடிப்படையில் நான்கு பிரிவுகளாக இந்தப் போட்டி இடம்பெறும்.

போட்டிகளில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பங்கள் இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அவ்வப் பகுதி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்குமாறு அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுரைப்போட்டி இம் மாதம் 21 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பின்வரும் இடங்களில் நடைபெறும்.

சங்கானைக் கோட்டம் — வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சண்டிலிப்பாய் கோட்டம்— மானிப்பாய் இந்துக் கல்லூரி, உடுவில்கோட்டம் — மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, தெல்லிப்பழைக் கோட்டம் — மல்லாகம் ம.வி. (க — 152)

## ஆலய உண்டியல் உடைத்துத் திருட்டு

நெல்லியடி, பெப். 4

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த இரவு நேரம் ஆலயம் ஒன்றினுள் புகுந்த இனந்தெரியாத நபர்கள், அங்கிருந்த உண்டியலை உடைத்துப் பெருந்தொகைப் பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த வியாழன்இரவு தென் புலோலி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்றது.

இத்திருட்டுச் சம்பவம் குறித்துப் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ஐ-109)

## அறிவுப்போட்டி

வடமராட்சி, பெப். 4

பேராசியர் அ. சண்முகதாஸின் மணிவிழாவை ஒட்டி வடமராட்சி மணிவிழாச்சபையினரால் வெளியிடப்பட்ட மணிவிழா மலருக்கு ஊடாக மாணவர்கள் இடையே அறிவுப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

மலரின் இறுதிப் பக்கத்தில் கேட்கப்பட்டுள்ள 25 வினாக்களுக்கும் விடைகளை எழுதிப் பாடசாலை அதிபர்களின் சிபார்சுடன் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் வடமராட்சி மணிவிழாச் சபையினருக்கு அனுப்பப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-173)

## நல்லூர் வாசி கைது

பருத்தித்துறைக்குச் சென்றிருந்த நல்லூரைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கடந்த 31 ஆம் திகதி அங்கு வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உருத்திராபதி ஜெயக்குமார் (வயது 28 — சிவன் வீதி, நல்லூர்) என்பவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.......

## சிவயோகம் அறக்கட்டளை உதவியுடன் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் கண் சத்திர சிகிச்சைக் கூடம்

### நாளை திங்கள் திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 4

யாழ். போதனா வைத்தியசாலையில் லண்டன் சிவயோகம் அறக்கட்டளையினரின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள கண் சத்திர சிகிச்சைக் கூடம் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12-05 மணிக்கு சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப்பட உள்ளது.

புதிய சத்திர சிகிச்சைக் கூடத் திறப்பு விழா போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி நவமலர்கணகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கண்சத்திர சிகிச்சைக் கூடத்தைத் திறந்து வைப்பார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை கண்வைத்திய நிபுணர் டாக்டர் ச. குகதாசன் கலந்து கொள்வார்.

சமயப் பேச்சாளரும் ஆசிரியருமான ஆறு. திருமுருகனின் பெருமுயற்சி, அயரா உழைப்பின் மூலம் 12 இலட்சம் ரூபா செலவில் இந்த நவீன கண் சத்திர சிகிச்சைக் கூடம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (க-3-15-10-139)

## பாலபண்டிதர் வகுப்புகள்

ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தின் பிரவேச, பாலபண்டித மற்றும் பண்டித வகுப்புகள் மீண்டும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும் இந்த வகுப்புகளில் பயில்வதற்குவிண்ணப்பித்வர்களும் புதிதாகச் சேர விரும்புபவர்களும் இன்று ஞாயிற்றுக் கிழமை மேற்படி பாடசாலைக்கு நேரில் வருமாறு சங்கத்தின் செயலாளர் பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரன் தெரிவித்துள்ளார். (க-10)

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம் ஸ்ரீ வீரபத்திரர் சமேத ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் மணவாளக் கோலத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும். (க-10)

★ ★ ★

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் ஞான வைரவர் சுவாமி கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவுறும்.

செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல் உற்சவ தினங்களில் மாலை 5.30 மணி தொடக்கம் 6.30 மணி வரை கம்பராமாயணம் பற்றி தொடர் சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தி வருகின்றார். (க-173)

★ ★ ★

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் மகாவல்லி, கஜவல்லி சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருவுருவாக்கல் விழா எதிர்வரும் தைப்பூச தினமான 7 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

சிற்ப கலாநிதி சு. சரவணபவன் இத்திருவுருவாக்கலை மேற்கொள்ளுவார். (க-135)

★ ★ ★

அரியாலை, பெப். 4

கந்தர்மடம் அரசடி வீதி செல்வ நரகபூஷணி அம்பாள் ஆலயத்தின் மணவாளக் கோலத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

காலை 8 மணிக்கு சங்காபிஷேகமும் நண்பகல் மகேசுவர பூசையும் இடம்பெறும்.


மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்

உயர்பட்டப் படிப்புகள் ஆய்வுபீட பீடாதிபதி
யாழ். பல்கலைக்கழகம்
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
அவர்களுக்கு

மணிவிழா எடுக்கும் இவ்வேளையில் தமிழுக்கும் தமிழ் சமுதாயத்துக்கும் தொண்டு செய்ய எல்லாம் வல்ல நெல்லண்டை இத்திபரத்தாளின் பாதம் பணிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நியூ ஸ்டார் ஜுவலர்ஸ்,
32, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
(83745)



அதிர்ஷ்டம் அழைக்கிறது
பொய்யாமொழி ஜோதிடம்

கல்வி, விவாகம், தொழில், பிரயாணம் போன்றவற்றில் தடைகள் விலக ஆலோசனை வழங்கப்படும். ஜாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம்.

ஸ்பொன்சரில் அழைக்கக்கூடிய மணமகன்மார் உண்டு. பெண்களின் ஜாதகத்துடன் வரவும். ஞாயிறுமல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடத்திலும் சனி, செவ்வாய் நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலடியிலும் சந்திக்கலாம்.

(83739)



மீசாலை
கைத்தொழில் வணிகர் மன்றம்
பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டத்தில் எமது சங்க எல்லைக்குட்பட்ட கைத்தொழில் வர்த்தகர்களின் இழப்பீடுகள் சம்பந்தமாக முக்கியமான விடயங்கள் சபையால் ஆராயப்பட வேண்டியுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

இடம்: கரவெட்டி கிழக்கு,
கிழவித்தோட்ட பிள்ளையார் கோயில்

காலம்: 2001-02-07 புதன்கிழமை
மு. ப. 10-30 மணி (புதிய நேரம்)

குறிப்பு: சங்கத்தின் சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரவேண்டும்.

- கைத்தொழில் வணிகர் மன்றம்
(பி/15150) மீசாலை.



வாழ்த்துகின்றோம்

இன்று [04 - 02 - 2001]
மணிவிழாக் கொண்டாடும்
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின்
சைவத்தமிழ்த் தொண்டு மேலும் தொடர்ந்து, நீடூழி காலம் வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

க. சோமசுந்தரக்குருக்கள் J. P
தி. சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் (ஆசிரியர்)
சைவக்குருமார் அர்ச்சகர் பேரவை, கோப்பாய்.
(83748)




வாழ்த்துகின்றோம்

04 - 02 - 2001 இல் சுவிற்சலாந்து மா ணிக்க விநாயகர் ஆலயத்தில் சிவாச்சாரியராக குருப் பட்டாபிடேகம் பெறும்

குரும்பசிட்டி
சிவசுப்பிரமணியம் பிரபாகரன்


அவர்களை சீரும் சிறப்புடனும் வாழ இறையன்பு வேண்டிப்பிரார்த்திக்கின்றோம்.

சு. முத்துக்குமாரசாமி குருக்கள்
(சிவாச்சாரிய பீடாதிபதி)
க. சோமசுந்தரகுருக்கள் J. P.
தி. சோமாஸ்கந்தராஜா குருக்கள்
(ஆசிரியர், சைவக்குருமார் அர்ச்சகர் பேரவை,
(83749) கோப்பாய்)



யாழ்.மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கமும், சர்வதேச அமெச்சூர் மெய்வன்மைச் சம்மேளத்தின் (IAAF) இலங்கைப் பயிற்சியாளர் சங்கமும் இணைந்து யாழ். நகரில் ஏற்பாடு செய்துள்ள- பயிற்சியாளர்களுக்கான - பயிற்சி முகாமின் ஆரம்ப வைபவம் நேற்றுப் பிற்பகல் யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கைப் பயிற்சியாளர் சங்கத்தின் தலைவர் திஸ்ஸ சமரசிங்க தலைமையில் வந்த இக் குழுவினர் நேற்றைய ஆரம்ப வைபவங்களின் போது யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத் தலைவர் கப்டன் என்.சோமசுந்தரம் (மத்தியில் அமர்ந்திருப்பவர்),பயிற்சியாளர்களை இங்கு கூட்டிவரும் பணியில் தொடர்பாளராக இயங்கிய மேஜர் பி.எஸ்.எஸ்.ஆர் உதயதீர ஆகியோருடன் அமர்ந்திருந்த போது எடுக்கப்பட்ட படம். இப்பயிற்சி முகாம் இன்றும், நாளையும் தொடர்ந்து நடைபெறும். இறுதி நாள் வைபவம் செவ்வாயன்று இடம்பெறும்.



மெய்வன்மைப் பயிற்சியாளர்களுக்கான பயிற்சிமுகாமின் ஆரம்ப வைபவத்தில் பங்குபற்றிய - விளையாட்டுத்துறை சார்ந்த - ஆர்வலர்கள்.

# அனைத்துத் தரப்பினரும் பங்குபற்றும் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும்

## சுதந்திர தினச் செய்தியில் டக்ளஸ் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.4

அனைத்துத் தரப்பினரும் அர்த்தமுள்ள வகையில் கைகுலுக்கிக் கொள்ளும் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும். தொடரும் யுத்தம் அதற்கூடாக நிறுத்தப்பட வேண்டும்.

வடக்கின் அபிவிருத்திப் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சரும் ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சுதந்திரம் என்பது வெறுமனே எழுதிவைக்கப்பட்ட வார்த்தையல்ல. ஒரு சிலருக்குரிய தனிச் சொத்துமல்ல. கட்டுப்பாட்டின் எல்லைகளை உணர்ந்து கொள்ளும் பொதுமக்கள் அனுபவிக்க வேண்டிய அரியதொரு பொதுச்சொத்து அது.

53 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற ஆட்சிமாற்றத்தின் விளைவாக ஏற்பட்ட அதிகாரப் போட்டியானது இனவாத வித்துக்களை ஊன்றியது. பதவிகளுக்கான போராட்டத்தின் மூலமாக இனவாதம் வளர்க்கப்பட்டதன் பெறுபேறாக இந்த நாட்டின் ஒரு தேசிய இனமாக வாழ்ந்த மக்கள் அந்நியர்களாக ஓரங்கட்டப்படலாயினர். இதன் விளைவாக 1948இல் கிடைத்தது வெறும் ஆட்சிமாற்றம் தான் என்று கருதி மீண்டும் சுதந்திரத்துக்கான குரல்கள் ஒலித்தன. நாமும் ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

இன்று தமிழ்ப் பேசும் மக்கள் இழந்த உரிமைகளுக்காகப் போராடி, இருந்த சுதந்திரத்தையும் இழந்து விட்ட நிலைமை உள்ளது. விரும்பியபடி உரிமைகளுக்காகப் போராடுவதற்குக் கூட சுதந்திரம் அற்ற நிலை. இந்த நிலை நீடித்துக்கொண்டிருந்தால் அழிவுகளே மீதமாகும் என்ற அச்சம் மட்டும்தான் மிச்சமாகிக் கொண்டிருக்கின்றது.

சரிந்துபோன போராளிகள், பொது மக்கள்; சிதைந்துபோன தேசம், வாழ்க்கை; இதனால் ஊனமுற்றவர்கள் பலர்; விதவையானவர்கள் பலர்; ஆதரிப்பாரற்று அநாதைகள் ஆனவர்கள் பலர். இவர்கள் தங்கள் நிம்மதியை இழந்து தவிக்கின்றனர். இந்த நிலைமைகளை உணராமல் சந்தர்ப்ப



வாத நிலைப்பாடுகளை மேற்கொள்ளும் சில தமிழ்க் கட்சிகள் வீரம் கொப்பளிக்கும் வார்த்தைகளை வீசுகின்றனர். ஆனால் தொடர்ந்து கொண்டிருக்கும் பகைமைகளால் இவர்களின் கண்ணீரைத் துடைக்க முடியாது. இரணமாகிப் போயுள்ள வாழ்க்கைக்கு நிவாரணமாவது தேட முடியாது.

பழிக்குப் பழி என்று கோபக் கனலை மூட்டுவதற்குப் பதிலாக உரிமைகளை நிலைநாட்டும் திடசித்தத்தையும் அழிவுக்குப் பதிலாக ஆக்கத்தைத் தேடும் உளப்பாங்கையும் ஊட்டி வளர்க்க வேண்டும்.

அதற்காக அனைத்துத் தரப்பினரும் அர்த்தமுள்ள வகையில் கைகுலுக்கிக் கொள்ளும் பேச்சுவார்த்தையும் அதனூடாக யுத்தம் நிறுத்தப்படுவதும் தேவை. எமது பாரம்பரிய தாயகத்தை வலியுறுத்தும் அரசியல் தீர்வுடன் உண்மையான ஜனநாயக சூழலை ஏற்படுத்த வேண்டும். அதுவே மக்களுக்கான சுதந்திரத்தை நோக்கி எம் தேசத்தை நகர்த்தும். எனவே இலங்கை மாதா தனது அனைத்துப் புதல்வர்களையும் அரவணைக்கக் கூடியதாக, பல்லின சமுதாயத்தின் விழுமியங்களை கௌரவிக்கும் வகையில், எல்லாத் தரப்பினரும் மேற்கொள்ளும் முயற்சிகளின் மூலமாக, புரிந்துணர்வுடன் வாழும் அரசியல் வழிமுறையை ஈட்ட வேண்டும். அதன் விளைவாக 1948 இல் அடைந்த ஆட்சிமாற்றத்தை அர்த்தமுள்ளதாக்குவோம். (ம)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க நிர்வாக உறுப்பினரும், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் உபதலைவருமான

ஐ.செல்வராசாவின்

தந்தையார்

சி.ஐயாக்குட்டி அவர்களின்

மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

யாழ். மாவட்ட

உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்,

(C/15155) வலிகாமம் உதைபந்தாட்ட லீக்.

## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

(பாதுகாப்பு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டது.)

**பாதுகாப்பு உத்தியோகத்தர் வெற்றிடம்**

1. உயரம்:- 5'4"
   மார்பு :- 32" } (குறைந்தளவு)

   நல்ல திடகாத்திரமும், கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.
2. கல்வி:- க.பொ.த.சாதாரணம் (குறைந்தது)
3. வயதெல்லை:- 24 -50 வரை
4. பொலீஸ், இராணுவ சேவையில் ஓய்வு பெற்றவர்களுக்கு விசேட சலுகை கொடுக்கப்படும்.

குறிப்பு:-

அண்மையில் பெற்ற கிராம அதிகாரியின் நற்சான்றுப் பத்திரத்துடன் நாளை (05.02.2001) காலை 10.00மணிக்கு நேரில் பிரசன்னமாயிருக்கவும்.

3ஆம் மாடி,
347,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/15152)


## மரண அறிவித்தல்கள்

### தயானந்தம் வாகீசன்

ஆறுகால்மடம் புதுவீதி ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தயானந்தம் வாகீசன் நேற்று (03-02-2001) சனிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
செ.செல்வரத்தினம்
(சித்தப்பா)

(C/15153)

### சின்னக்குட்டி ஐயாக்குட்டி

சுன்னாகம் மயிலணி வடக்கைச் சேர்ந்த சின்னக்குட்டி ஐயாக்குட்டி நேற்று (03.02.2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், வலி.வடக்கு பிரதேச சபை ஊழியர் செல்வராசாவின் அன்புத் தந்தையாரும், இந்திராவின் அன்பு மாமனும் வைகுந்தன் (சுவிஸ்), முகுந்தன் (ஹொலண்ட்), அனுசியா, கௌசியா, (ஸ்கந்தவரோதயக் கல்லூரி A/L 2002), றொபின் ஆகியோரின் பேரனும் பமில்டனின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2001) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கொத்தியாலடி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
ஐ.செல்வராசா(செல்வம்)
(மகன்)

(C/15154)

# புலிகளின் போர்நிறுத்தத்துக்குச் சாதகமாகப் பதிலளித்து நோர்வேயின் மத்தியஸ்த உதவியுடன் தாமதமின்றி நீதியான தீர்வு காண்க!

## கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர்கள் அரசுக்குக் கோரிக்கை

மட்டக்களப்பு,பெப்.4

"விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தத்திற்கு அரசு சாதகமான பதில் அளித்து, நோர்வே அரசின் மத்தியஸ்தத்துடன் இனப்பிரச்சினைக்கு- நீதியான - தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய - தீர்வு காண வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை இனியும் தாமதிக்காது அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளவேண்டும்."

- கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் 20 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்கத் தலைவர் ஏ.எஸ்.எம். சலீம் தலைமையில் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் இக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசு இனியும் தாமதிக்காது அரசியல் தீர்வு முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் யுத்தத்தினால் அல்லலுறும் மக்கள் நிம்மதியாக வாழ வழி செய்ய வேண்டும்.

தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கையான சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி தமிழ் மக்கள் நடத்திவரும் வெகுஜனப்போராட்டங்களுக்கு புலிச்சாயம் பூசும் அபாயகரமான சூழல் ஒன்று அண்மைக் காலமாக ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதனைத் தவிர்த்து வெகுஜன போராட்டங்களைக் கருத்தில் எடுத்து, அதற்கு தலைசாய்த்து நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் நீதியான தீர்வையும் ஏற்படுத்த அரசு முயல வேண்டும்.

ஏற்கனவே சாத்வீக போராட்டங்களைக் கவனத்தில் கொள்ளாது கடந்தகால அரசுகள் செயற்பட்டு வந்தமையாலேயே ஆயுதப்போராட்டம் முனைப்புப் பெற்று இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளது என்பதை நினைவூட்ட விரும்புகிறோம்.

அதேவேளை -

விடுதலைப் போராட்ட இயக்கங்களையும், பயங்கரவாத இயக்கங்களையும் இனங்காணும்போது தெளிவான வரையறையை சர்வதேச சமூகம் கடைப்பிடிக்க வேண்டும். விடுதலை போராட்ட இயக்கங்களையும் பயங்கரவாத இயக்கங்களையும் ஒன்றாகக் கருதி சிக்கலாக்கும் வகையில் செயற்படாது இனவிடுதலைக்காக போராடும் இயக்கங்கள் பற்றி தெளிவான நிலைப்பாட்டையும் சர்வதேச சமூகம் எடுக்க வேண்டும்.

பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகளை தடை செய்யக் கூடாது என்றும் வன்மையாகக் கோருகிறோம்.

விடுதலைப் புலிகள் தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்காக போராடும் விடுதலை இயக்கம் என்பதை சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும் என்றும் நாம் கோருகின்றோம்.

எழுந்தமானமாக, விடுதலை இயக்கங்களையும் பயங்கரவாத இயக்கங்களையும் ஒன்றாகக் கருதுவதன் மூலம் விடுதலைக்காகப் போராடும் இனங்களின் குரல்வளையை நசிக்கக் கூடாது - என்று தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'உதயன்' பத்திரிகை இணையாசிரியர் அண்மையில் பொலீஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட சம்பவத்திற்கு கூட்டத்தில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக தொடர்புசாதன அமைச்சரை நேரில் சந்தித்து ஆட்சேபனையை தெரிவிப்பதெனவும், கைது செய்யப்பட்ட பத்திரிகையாளர் திருச்செல்வத்தின் கைது தொடர்பாக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவதென்றும் கூட்டத்தில் மேலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ம-21)

## கப்பல் பயணத்துக்கான பதிவுகள் நேற்று நடந்தன

எதிர்வரும் 8ஆம், 13ஆம், 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் சேவைக்கான பதிவுகள் நேற்று இடம்பெற்றதாக வடக்கு மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபையின் யாழ்.அலுவலகம் அறிவித்துள்ளது.

இவ்வாறு பயணப் பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கு பயணச் சீட்டுக்கள் வழங்குவது பற்றி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பயணப் பதிவுகளை மேற்கொள்வதற்காக பல நூற்றுக் கணக்கானோர் நேற்று அதிகாலை முதல் யாழ்.சிறாம்பியடியில் உள்ள மணியம் கட்டடத்துக்கு முன்னால் திரண்டிருந்ததையும் -

பதிவுகளை மேற்கொள்வதற்காக அவர்கள் அல்லோல கல்லோலப்பட்டு முண்டியடித்ததையும் - காண முடிந்தது. (ம-7)

## தங்கத்தின் விலையில் மாற்றம் இல்லை

யாழ்ப்பாணம்,பெப்.4

கொழும்பில் தங்கத்தின் விலையில் பெரிய மாற்றம் ஏதும் இல்லை என்று நகைத் தொழிலோடு சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை ரூபாவுக்கு எதிரான டொலரின் பெறுமதியில் தொடர்ந்து தளம்பல் நிலை காணப்படுகின்ற போதிலும் கடந்த சில நாள்களாக கொழும்பு தங்க நகைச் சந்தையில் தங்கத்தின் விலையில் பெரிய மாற்றம் ஏதும் இருக்கவில்லை என்றும் -

அங்கு தங்கம் ஒரு பவுண் தொடர்ந்து ஆறாயிரத்து 400 முதல் ஆறாயிரத்து 425 ரூபாவுக்கு விற்கப்பட்டு வருவதாகவும் -

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கத்தில் பதிவினை மேற்கொண்ட 45 வயதுக்குட்பட்ட அனைத்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.00மணிக்கு யாழ் . ஆரிய குளத்தடி புதிய உயர்கலைக் கல்லூரியில் ஒன்று கூடுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (க)

## விமானத் தாக்குதல்

விமானப்படைக்குச் சொந்தமான மிக் போர் விமானங்கள் நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள புலிகளின் முகாம் மீது தாக்குதல் நடத்தியதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. நேற்றுக் காலை நிலாவெளி காட்டுப் பகுதியிலும் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக அது மேலும் தெரிவித்தது. (ம-6)

## இவர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.4

வடபகுதியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணமற்போனதாகக் கூறப்படும் செல்லம்மா சுபாஸ்கரன், முருகன் சிவராஜா, வைரமுத்து முத்துலிங்கம், கணேஷ் ரமணன் ஆகியோர் தொடர்பாக ஆள கொணர்வு மனுத்தாக்கல் செய்யப்படவுள்ளது.

மனித கௌரவத்துக்கான மன்றத்தினால் இம்மனு தாக்கல் செய்யப்படவுள்ளதால் இவர்களது உறவினர்களான கே.செல்லம்மா (வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை), எஸ். முருகன்(மறவன்புலோ - சாவகச்சேரி), வி.மகாலிங்கம் (கொழும்புத்துறை), எஸ்.கணேஷ்(சதுமலை வடக்கு) ஆகியோரை யாழ்ப்பாணம் மணியம் கட்டடத்தில் இயங்கும் மேற்படி மன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-7)

## மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இரு செயற்பாடுகளுமே சட்டத்துக்கு முரணானதும் பாரதூரமான குற்றத்துக்குரியதுமான செயற்பாடுகளாகும்.

- இவ்வாறு வவுனியா நீதிவான் எம்.இளஞ்செழியன் இராணுவத்தினருக்கும் பொலீஸாருக்கும் தமது உத்தரவு ஒன்றின் மூலம் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

பிரமணாலங்குளம் சோதனைச் சாவடியில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு செல்லும் பயணிகளிடமிருந்து இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு - அவர்களுக்கூடாக வவுனியா நீதிமன்றுக்கு பொதுமக்களால் கைவிடப்பட்ட பொருள்கள் எனக் குறிப்பிட்டு சமர்ப்பிக்கப்பட்டன.

இந்தப் பொருள்கள் தொடர்பாக விசாரணை செய்த நீதிவான் தமது உத்தரவில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சட்டத்தின் மூலம் தடைசெய்யப்பட்டுள்ள பொருள்களை பிரமணாலங்குளம் சோதனைச் சாவடி ஊடாக எவராவது கொண்டு செல்ல முயன்றால் அந்தப் பொருள்களுடன் சம்பந்தப்பட்ட நபரையும் கைது செய்து நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்ற சட்டத்துக்கு அமையவே பொலீஸாரும் இராணுவத்தினரும் செயற்பட வேண்டும்.

இதனை பிரமணாலங்குளத்தில் கடமையாற்றும் பொலீஸாருக்கும், இராணுவத்தினருக்கும் தெளிவுபடுத்திப் பணிப்புரை விடுக்குமாறு வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருக்கும் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார் நீதிவான்.

இனிமேல் சட்டத்துக்கு முரணாக செயற்பட வேண்டாம் எனவும் அவர் அறிவுறுத்தினார். (உ-6)

## இம்முறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடிகள் அவ்வளவு தீவிரமாக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பின் மீது அரசாங்கம் கொண்டுள்ள நம்பிக்கையின் வெளிப்பாடே இது என்று குறிப்பிடும் ஆய்வாளர்கள் இந்த நம்பிக்கை குறித்து வியப்புத் தெரிவிக்கவும் தவறவில்லை.

1995 ஆம் ஆண்டு அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்ற சமயமும் பாதுகாப்புக் கெடுபிடிகள் சுதந்திர தினக் காலத்தில் குறைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கடலுக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன. நான்கு பிள்ளைகளின் தந்தையான மகாலிங்கம் (வயது 28 - இரணைப்பாலை), இரண்டு பிள்ளைகளின் தந்தையான மணிவண்ணன் (வயது 27 - யாழ்.மயிலிட்டி), ஒரு பிள்ளையின் தந்தையான வேலுச்சாமி சுந்தரலிங்கம் (வயது 29 - உடுத்துறை), இரண்டு பிள்ளைகளின் தந்தையான கி.உதயகுமார் (வயது 31 - ஆழியவளை) ஆகியோரே காணமற்போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.(ம-7-164)

## பேச்சுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்தில் திட்டவட்டமான பதில் கிடைப்பது தாமதமாகின்றது. அது கிடைக்காமல் பேச்சுக் குறித்துத் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை" - இப்படி இலங்கை இனப்பிரச்சினைக்கு சுமூகத் தீர்வைக் காணும் முயற்சியில் நடுநிலையாளராகச் செயல்படும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்திருக்கின்றார்.

கடந்த மூன்று நாள்களாகத் தலைநகர் கொழும்பில் தங்கியிருந்த சமயம் ஜனாதிபதி சந்திரிகாவுடன் இரு தடவைகளும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒரு தடவையும் அவர் பேச்சு நடத்தினார். அப்பேச்சுக்களின் போது இந்த விடயத்தையே அவர் சுட்டிக் காட்டியிருப்பதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசு - புலிகள் இடையே பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சுமுக நிலையைத் தோற்றுவிக்கும் முயற்சியாக, நோர்வே முன்மொழிந்திருக்கும் புரிந்துணர்வு உடன்பாடு குறித்தும் இலங்கைத் தரப்பினருடன் சொல்ஹெய்ம் இம்முறை விரிவாகப் பேசியிருக்கின்றார்

இந்தப் புரிந்துணர்வு உடன்பாட்டின்படி - தமிழர் தாயகம் மீதான பொருளாதாரத் தடைகள் அனைத்தையும் இலங்கை அரசு நீக்க வேண்டும். அதே சமயம் வடக்கு, கிழக்குக்கு வெளியேயான தமது தாக்குதல் நடவடிக்கைகளைப் புலிகள் நிறுத்த வேண்டும்.

இந்த நிபந்தனைகளை ஏற்பதற்கு அரசும் புலிகளும் தயாராக உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆனால் இந்தப் புரிந்துணர்வு உடன்பாட்டில் குறிப்பிடப்படும் இந்த விடயங்களைக் கண்காணிப்பதற்கு ஒரு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர் குழு நியமிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்துவதை ஏற்பதற்கு இலங்கை அரசு பின்னடித்து வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (உ)


மனம் நலம் மங்கியவர்களின் மறுவாழ்விற்காக
STR FILMS ஆதரவில்
மருத்துவ மாணவர்களால் காண்பிக்கப்படும்
(CD projector show)
நிதி உதவிப் படக்காட்சி
இடம் : ராஜா திரையரங்கு
திகதி : 07.02.2001
நேரம் : 1ஆம் காட்சி காலை 9.00 மணி
2ஆம் காட்சி பகல் 12.30 மணி
3ஆம் காட்சி மாலை 3.30 மணி
(புதிய நேரம்)
குறிப்பிட்ட காட்சிநேரத்திற்கான நுழைவுச் சீட்டுக்கள் அதற்கு மாத்திரமே செல்லுபடியாகும் என்பதை அன்புடன் அறியத்தருகிறோம்.
குறிப்பிட்ட நேரத்திற்கு வருகை தருவதன் மூலம் எங்களுடன் ஒத்துழைக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.
தொடரும் யுத்தத்தாலும், இன்னும் பல இன்னல்களாலும் மனநலம் மங்கியவர்களின் மறுவாழ்விற்காக ஆதரவு வழங்கிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் நன்றிகள்.
அனுசரணை:-
JANSSEN - CILAG 'BENVILLE COURT'
1041, MARADANA ROAD, COLOMBO - 08.
(83747)



சாதிக்கமாட்டீர்களா?
இதோ....
A/L 2002
Accounting





BALAVASAN
B.B.A (F.M.Spl)
காப்புறுதிக் கோரிக்கை
MON, WEN → 6.30 a.m.
ஆரம் → நாளை 05.02.01
(83658)
நல்லூர் ... (?)



BRIGHTMAN
கல்வி நிலையம்
(நீராவியடிப் பிள்ளையார் கோவில் முன்பாக)
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
பௌதிகம்
A/L 2001
ஓட்ட மின்னியல்
By:- ஜெயசீலன்
ஆரம்பம்:05.02.2001
Mon. 2.30 p.m.(83627)



தித்திக்கும் தமிழமுதே! நீ வாழி!!
மணிவிழாக் காணும் மணிவிழா நாயகன்
உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி
மதிப்பிற்குரிய
பேராசிரியர் அ.சண்முகதாஸ்
அவர்கள் தமிழ்ச் சமூகத்துக்கும் கல்விச் சமூகத்துக்கும் நீண்டகாலம் சேவையாற்ற வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
முகாமைத்துவ கற்கைகள்
வணிகபீட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(83744)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.02.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.